கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
21-7-1974
40 காசு






எனக்கு இன்னுமொரு பாரி மிட்டாய் தா!


Parry's

குழந்தைகள் எப்போதும் விரும்புவது பாரி மிட்டாய்கள். அவர்கள் இழக்கும் சக்தியை திரும்பவும் உடனுக்குடனே வழங்குபவை பாரி மிட்டாய்கள். அவை புத்தம் புதியவை. சத்துள்ளவை. ருசிமிக்கவை.

PRS 6395

தயாரிப்போர்: பாரிஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், சென்னை-1





உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்
— பாரதியார்

■

கோகுலம்

மலர் 3 □ இதழ் 8
ஜூலை 21, 1974
ஆனந்த, ஆடி, 5

■

தனிப்பிரதி : 50 காசு
சந்தா விவரம்:
உள் நாடு:
ஒரு வருடம் ரூ. 13-00
ஆறு மாதம் ரூ. 6-50
வெளி நாடுகள்:
ஆண்டுச் சந்தா ரூ. 25-00
மானேஜர்:
கோகுலம்
கல்கிப் பூங்கா, சென்னை-600031

■



அட்டையில்:

கோகுலம் படிப்பதற்கே
கோடிப் பொன் கொடுக்கலாமே

வண்ணப்படம்:
துரலிங்கம்

பல்லக்கு

கவிஞர் கலாபாரதி

முத்துமணி சலசலக்கும்
மோகனமாம் பல்லக்கு
கொத்துச்சர மலர் மணக்கும்
கோல எழில் பல்லக்கு

தங்கமணி கிணுகிணுக்க
தவழ்ந்து வரும் பல்லக்கு
புங்கவராம் புனித முனி
புன்னகைக்கும் பல்லக்கு

நவநீதக் கண்ணனுடை
நளினமிகு பல்லக்கு
பவனிவரும் வீதியிலே
பளிங்கொளிரும் பல்லக்கு

கொட்டுமேளம் கொட்டிவர
கூட்டம் சூழும் பல்லக்கு
எட்டுத்திக்கும் வாணஒளி
இடையில்வரும் பல்லக்கு

கண்ணாடி பதித்து வைத்த
கலைக்கோயில் பல்லக்கு
பண்ணார்ந்த கவிதை மகள்
பாடிவரும் பல்லக்கு

அம்பிகையும் ஆண்டவனும்
அமர்ந்துவரும் பல்லக்கு
எம்பிரானும் தம்பிரானும்
ஏறிவரும் பல்லக்கு

ஆள்சுமந்து ஆடிவரும்
ஆனந்தமாம் பல்லக்கு
தோள்சுமந்து பாடிவந்து
தொண்டர்தாங்கும் பல்லக்கு

ஊரெல்லை தான்வரையில்
ஊர்ந்துவரும் பல்லக்கு
ஓரெல்லை தாண்டியதும்
ஓடிவரும் பல்லக்கு



இறைவன்!

·துறவி·

அல்லும் பகலும் காற்றுட,
ஆலை முழுதும் இயங்கிவர,
சொல்லாய் ஒளியாய் சினிமாவாய்,
சுகத்தைக் கொடுக்கும் குளிர்விளக்காய்

எல்லா வற்றையும் மின்சாரம்
இயங்க வைப்பது உண்மையெனில்
எல்லாம் வல்ல இறையவனை
இல்லை என்பது எவ்வாறு ?

இங்கும் அங்கும் எவ்விடத்தும்
இன்றும் அன்றும் என்றும்
பொங்கும் இன்பப் பொலிவினிலும்
புன்மை காணும் நெஞ்சினிலும்

இறைவன் இருப்பான் என்பார்கள்!
இறைவன் இருப்பது உண்மையெனில்
மறைவாய் இருப்பது ஏனென்று
மறுத்தும் சிலபேர் சொல்வார்கள்!





கோகுலக் குழந்தைகளே !

நீங்களெல்லோரும் மேல் வகுப்புக்குப் போயிருப்பீர்கள். புதிய புத்தகங்கள், நோட்டுக்கள் எல்லாம் வாங்கி யிருப்பீர்கள். கடந்த ஆண்டு நீங்கள் வாங்கிய நோட்டுப் புத்தகங்களின் விலைக்கும் இந்த வருஷம் வாங்கியிருப்பதற்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்திருப்பீர்களே! உலக மார்க்கெட்டிலேயே காகிதத்துக்குப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. காகிதத்துக்கு மட்டும்தானா? எல்லாப் பொருள்களுக்கும்தான்.

உங்கள் கோகுலம் பத்திரிகை வண்ணக் களஞ்சியமாக அச்சாகி உங்கள் கைகளில் தவழும் நிலைவரை ஆகும் செலவுகளைக் கணக்கிட்டால் இந்தப் பத்திரிகையை நடத்தவே முடியாது. ஆனால் கோகுலம் இல்லாத ஒரு நிலையை நீங்கள் யாருமே விரும்ப மாட்டீர்கள். உங்கள் மகிழ்ச்சிக்காகக் கோகுலம் தொடர்ந்து உங்களுக்குக் கிடைக்க வேண்டுமானால் நீங்கள் ஒரு சின்னத் தியாகம் செய்ய வேண்டும்.

மாதத்தில் ஒரு நாளைக்கு மிட்டாய் வாங்குவதையோ தின்பண்டங்களுக்காகச் செலவிடுவதையோ நிறுத்திக் கொண்டு கோகுலம் வாங்குவதற்காக என்று அதை ஒதுக்க வேண்டும். அடுத்த இதழிலிருந்து உங்கள் உள்ளங்கவர் கோகுலத்தின் விலை ஐம்பது காசுகளாகப் போகிறது. கொஞ்சம் அதிர்ச்சிதான் இது உங்களுக்கு. ஆனால் அதனால் உங்களுக்குக் கிடைக்கப் போகிற நன்மைகளை—மகிழ்ச்சியை, அறிவு வளர்ச்சியை—நினைக்கும் போது இந்த விலை உயர்வை ஒரு பெரிய விஷயமாகக் கருத மாட்டீர்கள் என்று நம்புகிறோம். உங்களுக்கு இன்னும் பல சுவையான, ரசமான அம்சங்களைத் தருவதற்குத் திட்டமிட்டிருக்கிறோம். ஆகவே தவிர்க்க முடியாத இந்த விலை உயர்வை நீங்கள் பொருட்படுத்தாமல் கோகுலம் தனது பயனுள்ள பணியைத் தொடர எப்போதும்போல் உங்கள் ஆதரவை அளிக்க வேண்டுகிறோம்.

— **ஆசிரியர்**

பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்தவாரியார்

மயூரேச விநாயகர்

சிங்காசுரன் கமலாசுரன் என்ற இரு அசுரர்கள் அண்ணன் தம்பியர். மாயத்திலே வல்லவர்கள். நல்லவர்க்கு இடர் புரிவதே இவர்களின் தொழில். "நமது பகைவர்களாகிய தேவர்களுக்கு வேதம் இருப்பதனால் வெற்றியும் நன்மையும் உண்டாகின்றன. வேதத்தைக் கவர்ந்து விட்டால் பல்லைப் பிடுங்கிய பாம்பு போல் அமரர்கள் அடங்கிவிடுவார்கள்" என்று கருதினார்கள்.

சங்காசுரன் மெல்லச் சென்று பிரமதேவர் சிவயோகத்தில் இருந்தபோது அவர் அறியாவண்ணம் வேதங்களைக் களவு செய்து கொண்டு சங்கு வடிவுடன் கடலில் மறைந்து உறைந்தான்.

கமலாசுரன் பேராற்றல் படைத்தவன். அமரர்களை வருத்தி உலகங்களைக் கலக்கினான். வேதம் இன்மையால் உலகில் வேத நெறி குன்றித் தீமைகள் மலிந்தன. எங்கும் பாவ இருள் மூடியது.

பிரமதேவர், 'இழந்த வேதத்தை எவ்வாறு பெறுவது?' என்று கவலைப்பட்டார். விநாயகரை நோக்கிப் பதுமாசனத்தில் அமர்ந்து தவஞ் செய்தார். சித்திபுத்திகளுடன் பிரமன்முன் விநாயகர் தோன்றி, "பிரமனே! நீ அஞ்சாதே! மறைகளை நாம் மீட்டுத் தருவோம்" என்று அருளுரை பகர்ந்தார்.

பின்னர் விநாயகர் ஓர் அந்தணச் சிறுவராகி, ஆயிரம் மாணவர்கள் சூழ, மல்லாலர் என்று திருப்பேர் தாங்கி, வேதாகமங்களை எழுதிய நூலைக் கரத்தில் தாங்கி மண்ணுலகுக்கு வந்தருளினார். முனிவர்களின் இருப்பிடம் போய் அவர்களிடம் மறை நூலைத் தந்து மறை நெறியைப் பரப்பி அருளினார். அதனால் வேத நெறி தழைத்து ஓங்கியது. பாவ இருள் பறந்தது. உலகம் செழித்தது. எங்கும் மறைகள் முழங்கின. முனிவர்கள் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கினார்கள்.

கமலாசுரன் இதைக் கண்டு நமது சூழ்ச்சி வீணாகிவிட்டதே என்று வேதனைப்பட்டான். கடலில் உள்ள தன் தமையன் சங்காசுரனிடம் இச்செயலைச் செப்பினான். சங்காசுரன், "தம்பி! நீ மேருகிரிக்கு நிகரானவன். நீ போய் அம்பல்லாலனையும் மறையவர்களையும் கொன்று தின்று வா!" என்று கட்டளையிட்டான்.

கமலாசுரன் பெரும் படையுடன் முனிவர்களையும் மல்லாலரையும் வதைக்கும் பொருட்டு வடவைத் தீயைப்போல் வந்தான். முனிவர்கள் நடுங்கினார்கள். மல்லாலர், "அந்தணர், முனிவர்களே! ஒன்றுக்கும் நீவிர் அஞ்சுதல் வேண்டாம். என்னை எளிய மறைச் சிறுவன் என்று கருத வேண்டாம். நான் அசுரர்களை அழித்து வேத நெறியை நிலைநாட்டுவேன்" என்று அபயம் தந்தார். பெரும் படைகளைத் தமது மாயையால் படைத்தருளினார். அசுரர் படைகளும் விநாயகர் படைகளும் பெரும் போர் செய்தன. எங்கும் உதிர வெள்ளம் ஓடியது; பிணங்கள் குவிந்தன.

கமலாசுரன் மல்லாலர் மீது தண்டாயுதத்தை ஏவினான். மல்லாலர் என்ற பேருடன் போரிடும் விநாயகர் ஹூங்காரம் செய்தார். தண்டாயுதம் பொடியாயிற்று. கமலாசுரன் சக்கராயுதத்தை எடுத்துத் தூப தீப வழிபாடு செய்து ஏவினான். அந்தச் சக்கராயுதத்தை விநாயகருடைய கரத்திலுள்ள சக்கராயுதம் தவிட்டுக் கனியைக் கோழி விழுங்குவது போல் விழுங்கிவிட்டது. இது கண்டு கமலாசுரன் கதிகலங்கினான். சக்தியாயுதத்தை ஏவினான். விநாயகர் அதைத் தம் அங்குசப் படையால் அழித்தார். கமலாசுரன் மழுவாயுதத்தை எடுத்து ஏவினான். விநாயகர் தமது மழுவாயுதத்தால் அவனுடையதைப் பொடிப்படுத்தினார். இப்படியே வருணாஸ்திரம், அக்கினி அஸ்திரம், நாகாஸ்திரம், இடியாஸ்திரம், வச்சிராயுதம் முதலிய பல தெய்வப் படைகளை விடுத்தான். அத்தனை படைகளையும் விநாயகர் அழித்து விட்டார். கமலாசுரன் அஞ்சி மறைந்து விட்டான்.

முனிவர்கள் வேள்வி செய்து ஒரு மயிலை உண்டாக்கினார்கள். "ஐயனே! இம்மயிலின் மீது ஏறிப் போர் புரிவீர்" என்று வேண்டிக் கொண்டார்கள்.

மறு நாள் மல்லாலர் மயில்மீது ஏறிப் போருக்கு வந்தார். சித்தி புத்திகள் என்ற இரு தேவியருடன் மயில் மீது ஆரோகணித்தார். அதனால் மயூரேசர் என்று பேர் பெற்றார்.

கமலாசுரன் தனது சேனை வெள்ளத்துடன் போருக்கு வந்தான். அது கண்ட விநாயகருடைய தேவியாகிய புத்திதேவி தாம் போருக்குப் போவதாக வேண்டிக் கொண்டார். விநாயகர் புத்தி தேவியைப் போருக்குப் போகுமாறு கட்டளையிட்டார்.

புத்திதேவியின் படைக்கும்கமலாசுரன் படைக்கும் போர் நடந்தது. புத்திதேவியின் படைகளைக் கமலாசுரனுடைய படைகள் வென்றன. அதனால் புத்திதேவி கடுஞ்சினங் கொண்டார். அந்தக் கோபாக்கினியில் இருந்து ஒரு வீரன் தோன்றினான். அவன் விண்ணளாவி நின்றான். அவனுடைய தோள்கள் மலை போல் விளங்கின. அவன் உலகங்களை ஒரு கவளமாக எடுத்து விழுங்கும் விறலும் வீரமும் கொண்டு நின்றான்.

அவன் புத்திதேவியின் பொன்னடிகளைப் பணிந்து, ''தாயே! என் தந்தை யார்? அவர் எங்கே இருக்கின்றார்?'' என்று வினவினான். புத்திதேவியார், ''புதல்வனே! உன் பிதா அருகில் உள்ள சுந்தர ஆசிரமத்தில் இருக்கின்றார்'' என்றார். அவன் ஆசிரமத்துக்குச் சென்று விநாயகருடைய அடி மலர் மீது வீழ்ந்து வணங்கினான். விநாயகர் அவன் மீது தமது அருட் பார்வையைச் செலுத்தினார். அதனால் அவனுக்கு அளவற்ற ஆற்றல் மிகுந்தது.


மயூரேசர் ''முனிவர்களே! இவன் நமது புதல்வன். ''இலாபன்'' என்ற பேருடையவன். இவன் இடர்களைக் களைவான்'' என்று கூறினார். முனிவர்கள் இலாபனை இறைஞ்சினார்கள். இலாபன் போருக்கு வந்தான். கமலாசுரன் இலாபனைக் கண்டு கடுஞ் சினம் அடைந்தான்.

''பிள்ளாய்! நீ வீணே என்னால் மாண்டு போகாதே. நீ அணு; நான் மலை. திரும்பிப் போ'' என்று வீர உரைகள் விளம்பினான். இலாபன் அண்டங்கள் வெடிபடச் சிரித்தார். கமலாசுரனுடைய சேனைகளையும் மாய்த்து ஒழித்தான். . கமலாசுரன் மோகனப் படை ஏவினான். அவன் ஏவிய மோகனப் படையைத் தவிடு பொடியாக்கினார் இலாபன். ஆறு நாள் இலாபனுக்கும் கமலாசுரனுக்கும் போர் நடந்தது. கமலாசுரன் இளைத்துப் புறங்கொடுத்து ஓடி மறைந்தான்.

கமலாசுரன் களைப்பு மாறி எஞ்சியுள்ள சேனைகளைத் திரட்டிக் கொண்டு போருக்கு வந்தான். விநாயகர் மயில் மீது ஏறிப் போருக்கு வந்தார். கமலாசுரன் மீது பல கணைகளை ஏவினார். அவன் உடம்பிலிருந்து சிந்திய ஒவ்வோர் உதிரத் துளியும் அவனைப் போன்ற வடிவுடன் தோன்றியது. இதனால் அவுணப் படைகள் பெருகின. கமலாசுரன் களிப்புடன் ஆயுதங்களை அள்ளி அள்ளி இறைத்தான்.

அப்போது சித்தி புத்தியர் கோடி கோடி பூத வீரர்களை உண்டாக்கினார்கள். அப்பூதகணங்கள் அண்டங்களை விழுங்கும் ஆற்றல் படைத்தவை. அவை கமலாசுரனுடைய உதிரம் நிலத்தில் சிந்தாதபடி உடனுக்குடன் பருகின. இலாபன் கடும் போர்புரிந்தான்.

விநாயகர் சூலப் படையால் கமலாசுரனைக் கொன்றார். அவனுடைய ஆன்மா விநாயகருடைய திருவடியில் கலந்தது. விண்ணவர்கள் தண்ணலர் மாரி பெய்தார்கள். 'மயூரேசர் வாழ்க' என்று வாழ்த்தி வணங்கினார்கள்.




தினமும் மகனை நோட்டுக்களால் குளிப்பாட்டாமல் அவன் இருக்க மாட்டான். இது அவனுக்கு ஒரு கெட்ட பழக்கமாகி விட்டது.

''என் மகன் அஷ்ட ஐசுவரியத்தையும் அடையப் போகிறான் பார்வதி!'' என்பான். 'பாரேன்! எத்தனை நூறு ரூபாய்த் தாள்கள்! அத்தனையும் இவன் தலையில் விழுகுது பார்!.. உண்மையிலேயே இப்படி நூறு ரூபாய்த் தாள்களில் புரளும் காலம் வராமலா போய் விடும்?'' என்பான்.

ஆனால் சாப்பிட்டு முடிந்ததும் எல்லா நோட்டுக்களையும் பத்திரமாக எடுத்துக் கட்டி மானேஜரிடம் ஒப்படைக்கும் போது?...

ஆமாம்; பாங்கில் எடுக்கிற ரூபாய், அல்லது யாராவது பார்ட்டிகளிடம் வசூல் செய்கிற ரூபாய்களாம் அவை. சாப்பாட்டு நேரத்தில் வீட்டுக்கு வர வேண்டியிருப்பதால் வீட்டில் அதை வைத்திருந்து விட்டுக் கால் மணி நேரம் தூங்கவும் போட்ட பின்னர் எடுத்து வந்திருக்கும் ரூபாய்த் தாள்களில் மகனைக் குளிப்பாட்டி விட்டுப் பழையபடி கட்டி எடுத்துக் கொண்டு போவான்.



ரூபாய் நோட்டுக்களில் குளிப்பவன்

கெ. ராமசாமி



பார்வதி சொல்வாள்: ''விளையாட்டுக்குத்தான் செய்கிறீர்கள். ஆனால் வினையாகிவிடும். ஒரே ஒரு தாள் காற்றில் பறந்து போனாலும் நம்மால் ஈடு கொடுக்க முடியுமா?''

''வீட்டுக்குள் அப்படி எந்தப் புயற் காற்று திடீரென்று வந்துவிடப் போகிறது? அப்படியே வந்தாலும் சுவரைத் தாண்டி ரூபாய் எங்கே போய்விடப் போகிறது?'' என்பான் நடராஜன்.

மகன் கந்தனுக்கு இரண்டு வயதாகப் போகிறது. ரூபாய்த் தாள்களை மேலே கொட்டும்போது 'கெக்கே கெக்கே' என்று சிரிப்பான். ஆனால் அவன் ரூபாயைக் கிழித்துவிடாமல் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்வான்.

''பார்த்தியாடா மகனே!... இது தாண்டா உலகப் பம்பரத்தையே ஆட்டி வைக்கிற கயிறு! நீ வயசுக்கு வரும்போது இப்படிச் சம்பாதிக்கிற அதிர்ஷ்டம் இருக்கிறது என்றுதான் இப்பவே தெரிகிறது....''

ஒரு நாள் கொஞ்சம் அதிகமாகவே சுமார் நாற்பதாயிரத்துச் சொச்சம்— ஒரு பெரிய பையில் கொண்டு வந்தான். முதல் நாள் இரண்டாவது ஆட்டம் பார்த்த அலுப்பு. குளிப்பாட்டுகிற சடங்கை மறந்து நாலு கட்டுகளையும் எடுத்துப் பீரோவில் பத்திரமாக வைத்து விட்டுக் கண்ணயர்ந்தான். பார்வதியும் உறங்கி விட்டாள்.

நடராஜன் கண் விழிக்கும்போது சுமார் அரை மணி நேரம் ஆகிவிட்டது. யாரோ தாள்களைக் கிழிக்கும் சத்தம் கேட்டு அசிரத்தையாய்க் கண் விழித்தான்.

''அப்பா... அப்பா... மத்தாப்பூ.... மத்தாப்பூ....'' என்று கந்தன் மழலையில் அழைப்பதைக் கண்டு எழுந்து பார்த்தவனுக்கு உயிரே உறைந்து போயிற்று. கொல்லைப்புறம் வெந்நீர் தயாரிக்க வைத்திருந்த பெரிய அடுப்பு திமுதிமுவென்று எரிய, ரூபாய்த் தாள்களை ஒவ்வொன்றாக உள்ளே போட்டு எரித்துக் கொண்டிருந்தான் கந்தன்.

'வீல்' என்று அவன் அலறிய அலறலில் பார்வதி விழித்துக் கொண்டாள்.

அப்பா உள்ளே வைத்த நோட்டுக்களால் இன்று தன்னைக் குளிப்பாட்டாமல் போகவே, சரியாக மூடப்படாத பீரோவை எட்டித் திறந்து மூன்று முழுக் கட்டுக்களையும் பிரித்து இறைத்துக் கிழித்து, அடுப்பிலும் மூக்காலவாசியைப் போட்டு விட்டான்! மீதி ஒரே ஒரு கட்டு மட்டும் இருந்தது.

நடராஜன் துள்ளினன்; கத்தினன்; கதறினன்; முட்டி மோதினன்.

பார்வதி மூர்ச்சையாகி விழுந்தாள்.

அக்கம் பக்கத்தினர் கூடினர். அநுதாபப்பட்டனரே தவிர ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒரு பெரியவர் நல்ல யோசனை சொன்னர். அடுப்பு அப்படியே இருக்கட்டும். எரிந்த தாள்களும் அப்படியே இருக்கட்டும். முதலில் நேரடியாகக் கம்பெனி முதலாளியிடமே போய் விஷயத்தைச் சொல்லி, தான் பொய் சொல்லவில்லை என்று நிரூபிப்பதற்காக அவரையும் அழைத்து வந்து காட்ட வேண்டியது. பிறகு அவர் என்ன சொல்கிறரோ, அதன்படி ஆகட்டும்.

தன் கம்பெனியைப் பற்றி நடராஜனுக்கு நன்கு தெரியும். இப்போதுதான்



ஏதோ ஒரு மாதிரியாக வியாபாரம் நன்கு நடக்கிறது. ஆனலும் நல்ல லாபம் என்று சொல்ல முடியாது. இவ்வளவு பெரிய தொகை திடீரென்று நஷ்டமானல் கம்பெனியே நொடிப்பதுடன் மட்டுமல்ல. அதன் முதலாளியும் மிகப் பெரிய கடனாளியாகி நூறு பேருக்குப் பதில் சொல்ல வேண்டிய பயங்கர நிலைமை ஏற்பட்டுவிடும்.

போகிற வழியில் இதே நினைவுகள் தான்.

முதலாளியிடம் விஷயத்தை நேரில் சொல்ல வேண்டியிருப்பதால் மானேஜரிடம் எதையும் கூற வேண்டாம் என்று எண்ணிக் கொண்டான். ஆனல் முதலாளி வீட்டில் இருக்கிறரா என்ற விவரத்தை மானேஜரிடம்தான் விசாரிக்க வேண்டும். ஆகையால் மானேஜரைப் போய்ப் பார்ப்பது என்கிற திட்டத்துடன் ஆபீசுக்கு வந்தான். பேயறைந்தது போன்ற நிலைமையை மாற்றி முகத்தை சகஜமாக வைத்துக் கொண்டான்.

இன்று அவனுடைய மகன் தீயில் எரித்த தொகை பாங்கில் எடுத்ததல்ல. ஒருபார்ட்டியிடம் வசூல்செய்தநிலுவை.

நடராஜன் மானேஜரிடம் ரூபாயைப் பற்றியோ, வேறு எதைப் பற்றியுமோ பேசவில்லை. முதலாளி எங்கே இருக்கிறர் என்று மட்டும் விசாரித்தான்.

அதற்குள் அடுத்த அறைக்குள்ளிருந்து திடுதிடுவென்று இரண்டு பேர் பாய்ந்து ஓடி வந்தனர். நடராஜனின் உடலை நன்ருகச் சோதனை போட்டனர். மானேஜரின் கண் பார்வையைக் கவனித்த நடராஜன் எதுவும் பேசவில்லை.

அவனிடம் எதுவும் இல்லை என்று தெரிந்ததும் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு ''ஸாரி மிஸ்டர் கவிவரதன்! எங்களுக்குக் கிடைத்தது ராங் இன்ஃபார்மேஷனுயிருக்கலாம். எதற்கும் எங்கள் ட்யூட்டியைச் செய்தோம். ஆனல் ஒன்று மட்டும் நிச்சயம். இந்த பிஸினஸ் நீங்கள் உண்மையாகவே செய்வதாயிருந்தால் சட்டத்தின் பிடியில் கண்டிப்பாய்ச் சிக்கியே தீருவீர்கள்...'' என்ருர்கள் அந்த ஸி.ஐ.டி. போலீசார்.

அவர்கள் அந்தப் பக்கமாகப் போய் மறைந்ததும் ''அப்பாடா!... நல்ல வேலை நடராஜன்! உமக்கு எப்படித் தெரியும், நீர் கொண்டு வரும் கள்ள நோட்டுக்களைப் பிடிப்பதற்காக ஸி.ஐ.டி.க்காரர்கள் காத்திருக்கிருர்கள் என்று? நோட்டுக்களை ஒளித்துவிட்டு வந்திருக்கிறீரா?.... நல்ல வேலை செய்தீர்!.... உடனடியாக அந்த நோட்டுக்களை டெஸ்ட்ராய் செய்யும்... கொளுத்திச் சாம்பலாக்கி விடும்... கையிலிருந்தால் ஆபத்து! ஓடும்!'' என்று விரட்டினர் மானேஜர்!

RAAS/B/156 TAM



12 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகள் தங்களது சேமிப்புக் கணக்கை தாமே நடத்த

பூட்ஸ்கால் பூனை

விகேயெம்




வெகு வெகு காலத்துக்கு முன்னாலே பிரான்ஸ் தேசத்தில் ஓர் ஏழை இருந்தான். அவன் மாவரைக்கும் யந்திரம் வைத்துப் பிழைத்து வந்தான். அவனுக்கு மூன்று பிள்ளைகள். அவன் இறக்கும்போது தன் பிள்ளைகளுக்கு ஆஸ்தி ஏதும் வைக்கவில்லை. மாவரைக்கும் சாதனத்தை மூத்த மகனுக்கும், மூட்டை சுமக்கும் கழுதையை இரண்டாமவனுக்கும் தான் வளர்த்து வந்த பூனையை மூன்றாவது பிள்ளைக்கும் கொடுத்துவிட்டுக் கண்ணை மூடினான். பாவம், மூன்றாவது மகன்! 'பூனைக் குட்டியை வைத்துக் கொண்டு நான் எப்படிப் பிழைப்பேன்? என் அண்ணன்மார்கள் எல்லாம் கழுதையையும் யந்திரத்தையும் வைத்துக் கொண்டு வாழ்க்கையைச் சந்தோஷமாகத் தொடங்கி விட்டார்கள். நான் இந்தப் பூனையைக் கொன்று இதன் தோலைக் கையுறை செய்வதற்கு விற்றால் கூட ஒரு நாளைச் சாப்பாட்டுக்குத்தான் வரும்' என்று தனக்குத் தானே சொல்லி அலுத்துக் கொண்டான்.

அவன் அருகே இருந்த பூனை இதைக் கேட்டுக் கொண்டிருந்தது. ''எஜமானரே! என் தோலை விற்றுச் சாப்பிடுவதைவிட நல்ல காரியங்களைச் செய்யலாம். நான் சொல்கிறபடி கேட்டீர்களானால் உங்களைத் தேடி நல் வாழ்வு தானாக வரும்'' என்றது.

பூனை பேசுவதைக் கேட்டு வியப்படைந்த வாலிபன் அது சொல்வது நியாயமாகவும் நம்பிக்கை அளிப்பதாகவும் இருப்பதைக் கண்டு, ''நீ எது சொன்னாலும் அதன்படி நான் கேட்கிறேன்'' என்று உறுதியளித்தான்.

''அப்படியானால் எனக்குக் கனமான ஒரு ஜதை உயர்ந்த பூட்ஸ்களையும் ஒரு சாக்குப் பையையும் தயார் செய்து கொடுங்கள். பிறகு நடப்பதைப் பாருங்கள்'' என்றது பூனை.

மாவாலைக்காரனின் கடைசி மகன் பூனை கேட்டபடியே காலணிகளையும், கோணிப் பையையும் தயார் செய்து கொடுத்தான். பூட்ஸ்களுக்குள் பூனை தன் கால்களை நுழைத்துக் கொண்டது. கோணிப் பையைத் தோள் மீது போட்டுக் கொண்டது. அடுத்திருந்த ஒரு கானகத்தை நோக்கிப் புறப்பட்டது.



அந்த ஊர் ராஜாவுக்கு முயல் மாமிசம் என்றால் ரொம்பப் பிடிக்கும். இதை அறிந்திருந்தது பூனை. அந்தக் காட்டில் ஏராளமான முயல்கள் இருந்தன. ஆனால் அவைகளை யாராலும் பிடிக்க முடியவில்லை. ராஜாவின் ஆசையும்


நிறைவேறவில்லை. ஓர் இடத்தில் பூனை தன் சாக்குப் பையைத் திறந்தபடி வைத்து அதன் அருகில் செத்துப் போனது போல் பாசாங்கு செய்தபடி படுத்துக் கொண்டது.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் நாலைந்து கொழுத்த முயல்கள் அந்தப் பக்கமாக வந்தன. சாக்குப் பையில் காரட், லெட்டூஸ், கோஸ் எல்லாம் இருந்தன. முயல்களுக்கு நாக்கில் நீர் ஊறியது. 'பூனையோ இறந்து கிடக்கிறது. பயப்பட வேண்டியதில்லை' என்று சாக்குப் பைக்குள் தாவிக் குதித்து உற்சாகமாகத் தின்ன ஆரம்பித்தன. இதற்காகவே காத்திருந்த பூனை குபீரென்று எழுந்து சாக்குப் பையின் நூலை 'சர்' என்று இழுத்து அதை மூடி போட்டுக் கட்டியது. முயல்கள் மூட்டைக்குள் சிறைப்பட்டன.

மூட்டையுடன் அரண்மனைக்கு வந்தது. 'அரசரைப் பேட்டி காண வேண்டும், அவருக்கு அன்பளிப்பாக முயல்களுடன் வந்திருக்கிறேன்' என்றது. பூட்ஸ் போட்ட பூனையையும், அது கம்பீரமாகப் பேசுவதையும் கண்ட காவல்காரன் ஓடோடிப் போய் அரசரிடம் விஷயத்தைக் கூறினான். அரசரும் அனுமதியளித்தார். மன்னரின் முன்னால் சிரம் தாழ்த்தி மரியாதை செலுத்திய பூனை, ''மன்னர் அவர்களே, என் எஜமானர், காரபாஸ் நகரின் அதிபர், தங்களுக்கு இதைக் காணிக்கையாக அனுப்பி இருக்கிறார்'' என்று முயலை அவர் முன்னால் வைத்தது. மன்னருக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. அவருக்குப் பிடித்தமான உணவாயிற்றே! ''இனி இந்தப் பூனை எப்போது என்னைக் காண விரும்பினாலும் தடை சொல்லாமல் அரண்மனைக்குள் அனுப்பி வையுங்கள்'' என்று தம் பணியாளர்களுக்கு ஆணை பிறப்பித்தார்.

பூனையும் மன்னர் அளித்த இந்தச் சலுகையைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொண்டது. அடிக்கடி காட்டுக்குப் போய் அவருக்குப் பிடித்தமான காடை, கவுதாரி, குயில், மயில் என்று பலவிதமான சுவை மிக்க உணவு வகைகளாகப் பிடித்துக் கொண்டு போய் அதைத் தன் எஜமானர் காரபாஸ் நகர் அதிபர் அளித்ததாகக் கொடுத்துக் கொண்டிருந்தது.

ஒருநாள் பூனை மூன்றாவது மகனிடம் ஓடி வந்தது. ''நான் சொல்கிறபடி கேள். உனக்கு நல்ல காலமும் அதிர்ஷ்டமும் வரப் போகிறது. நாளை ஊருக்கு வெளியிலுள்ள காட்டாற்றில் இறங்கிக் குளித்துக் கொண்டிரு. மற்றதை எல்



லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். அரசரும் அவருடைய ஒரே பெண்ணான அரச குமாரியும் அந்தப் பக்கமாகக் கோச்சு வண்டியில் வருவார்கள். அப்போது நீ ஆற்றில் இருக்க வேண்டும், குளித்தபடி. அப்போது நான் என்ன செய்தாலும் நீ மறுக்கவோ, வியப் படையவோ செய்யாதே!'' என்றது பூட்ஸ் போட்ட பூனை.



மறு நாள் அது சொன்னபடியே வாலிபன் காட்டாற்றுக்குப் போனான். தன்னுடைய கந்தல் ஆடையைக் கழற்றிக் கரையில் வைத்து விட்டு ஆற்றில் இறங்கிக் குளிக்கலானான். பூனை உடனே அந்த உடையை மறைத்து வைத்தது. பிறகு மன்னரின் கோச்சு வண்டி வருவதற்காகக் காத்திருந்தது, ஒரு புதர் மறைவில். கோச் வண்டி வருவதைத் தூரத்தில் பார்த்ததும் ஆற்றங் கரையில் வந்து நின்று கொண்டு, ''உதவி, உதவி! யாராவது காப்பாற்றுங்களேன்! என் எஜமானர் காரபாஸ் நகர் அதிபர் காட்டாற்றில் மூழ்கிக் கொண்டிருக்கிறார்'' என்று அபயக் குரல் எழுப்பியது.
பூட்ஸ் அணிந்த பூனை, தனக்கு அடிக்கடி காணிக்கைகளைக் கொண்டு வந்து கொடுக்கும் பூனையைக் கண்ட அரசர் வண்டியை நிறுத்தச் செய்து ஆற்றங் கரைக்கு விரைந்தார்.

''ஐயோ! கொலைகாரப் பாவிகள்...! திருடர்கள் என் எஜமானரின் பொருள்களைக் கொள்ளை அடித்துக் கொண்டு அவரது உடைகளைக்கூட விட்டு வைக்காமல் — அவரை ஆற்றில் தள்ளிவிட்டு ஓடிவிட்டார்கள் அரசே!'' என்று பரிதாபமாகப் பிரலாபித்தது. உடனே மன்னரோடு வந்த பணியாளர்கள் வாலிபனை ஆற்று வெள்ளத்திலிருந்து காப்பாற்றிக் கரை சேர்த்தார்கள். ஒருவன் அரண்மனைக்கு ஓடினான், ராஜ உடைகளைக் கொண்டு வருவதற்காக. ''இவர்தான் என் எஜமானர், காரபாஸ் நகரின் அதிபர்'' என்று பூனை இளைஞனை மன்னருக்கு அறிமுகப் படுத்தியது. இளைஞனின் கட்டான உடலிலும் கனிவான பார்வையிலும், களையான முகத்திலும் மகிழ்ச்சி கொண்ட மன்னர் அவனைத் தம்முடன் கோச்சில் தம் அருகில் வந்து அமர்ந்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்.

பூட்ஸ் அணிந்த பூனை இதற்குள் முன்னால் ஓடியது. கண்ணுக்கெட்டியவரை கோதுமை பயிரிட்டு அறுவடை நடந்து கொண்டிருந்தது. அந்தக் குடியானவர்களிடம் போய்த் தனது மீசை துடிக்க உரத்த குரலில் அவர்களுக்குக் கட்டளை இட்டது. ''நல்லவர்களே! நான் சொல்கிறபடி கேளுங்கள்! இந்தப் பக்கமாக மன்னர் வரப் போகிறார். நிச்சயம் அவர் இந்தப் பரந்த நிலத்தின் அருகே தம் வண்டியை நிறுத்தி 'இந்தக் கோதுமை வயல்கள் யாருக்குச் சொந்தம்?' என்று கேட்பார். நீங்கள் 'இது காரபாஸ் நகர அதிபருக்கு உரிமையானவை' என்று சொல்ல வேண்டும். சொல்லா விட்டால் உங்கள் எல்லாரையும் கண்டதுண்டமாக வெட்டிப் போட்டுவிடுவேன்.''

பூனை சொன்னபடியே மன்னரின் கோச்சு வண்டி வந்தது. அவரும் அது சொன்னபடியே கேட்டார். குடியானவர்களும் அதன் கட்டளையிட்டபடியே கூறினார்கள்.

''எத்தனை பரந்த நிலம்? என்ன செழுமையான விளைச்சல்? அற்புதம்'' என்று தம் அருகே அரச உடையில் அமர்ந்திருந்த வாலிபனிடம் பாராட்டினார் அரசர். அவனும் புன்முறுவலுடன்

அதை ஆமோதித்து ஏற்றுக் கொண்டான்.

இதற்குள் பூட்ஸ் அணிந்த பூனை மன்னருக்கு முன்னால் வேகமாகச் சென்றது. ஒரு பெரிய திராட்சைத் தோட்டத்திற்கு. ஏராளமான தொழிலாளர் அங்கு திராட்சைக் குலைகளைப் பறித்துச் சேகரித்துக் கொண்டிருந்தார்கள். பூனை தன் வாலைக் குழைத்துப் பின்னால் வளைவாக நிமிர்த்தியபடி அவர்களிடம் கூறியது. ''மன்னர் வந்து கொண்டிருக்கிறார். இந்தப் பெரிய திராட்சைத் தோட்டம் யாருடையது என்று கேட்டால்.....'' — கோதுமை வயலில் குடியானவர்களுக்கு ஆணையிட்டதுபோலவே இவர்களுக்கும் கட்டளை பிறப்பித்தது. பூனை கூறியபடியே அரசரின் கோச்சு வண்டி திராட்சைத் தோட்டத்தைக் கண்டதும் நின்றது. எல்லாமே சொல்லி வைத்தாற்போல் முன் போலவே நடந்தன.

''எவ்வளவு உயர்ந்த திராட்சைகள்? இத்தனை பெரிய திராட்சைத் தோட்டத்து அதிபரான நீர் பாக்கியசாலிதான்'' என்று பாராட்டினார் இளைஞனை மன்னர். அவனும் தன் பூனையின் திறமையை எண்ணி மகிழ்ந்து சிரித்துக் கொண்டான்.

இதற்குள் பூட்ஸ் கால் பூனை ஒரு பெரிய கோட்டைக்குள் புகுந்தது. அது ஒரு கொடிய பூதத்தின் கோட்டை. அந்த விளை நிலமெல்லாம் அந்தப் பூதத்தினுடையதுதான். அது ரொம்பக் கொடிய பூதம். அதனிடம் வேலை செய்கிறவர்களெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தார்கள். சிறிய குற்றமானாலும் அவர்களை உடனே அது தன் உணவாகச் சாப்பிட்டுவிடும். அதனுடன் யாராலும் போராடி வெல்ல முடியாது. எந்த மிருகத்தின் உருவத்தையும் எடுத்துக் கொள்ளும் வல்லமை பெற்றது அந்தக் கொடிய பூதம். எத்தனை பலசாலியானாலும் வீராதி வீரனானாலும் கர்ஜனை புரியும் சிங்கத்துடனோ, கொடிய புலியுடனோ, கொல்ல வரும் மதம் கொண்ட யானையுடனோ போராடி முடியுமா? கோட்டைக்குள் நுழைவது பூனைக்குப் பெரிய விஷயம் இல்லையே! புகுந்து விட்டது. உள்ளே பெரிய கூடத்தில் பூதம் உட்கார்ந்து கொண்டிருந்தது, உணவருந்தியபடி.

''யார் நீ? என் கோட்டைக்குள் வர உனக்கு என்ன தைரியம்?'' என்று கர்ஜித்தது பூதம்.

''பிரபுவே, தயாநிதியே! நான் ஓர் எளிய பாதசாரி. ஊர் ஊராகப் போய் உலகின் அதிசயங்களையெல்லாம் கண்டு வருகிறேன். நான் சின்னக் குட்டியாக இருக்கும் போதே உங்கள் புகழ் பற்றிக் கேட்டிருக்கிறேன். இமைக்கும் நேரத்தில் நீங்கள் எந்த மிருகமாக வேண்டுமானாலும் உருமாறுவீர்களாமே? உண்மைதானா? என்னால் நம்பவே முடியவில்லை'' என்றது.

''உண்மைதான். நம்பலாம்..பார்க்கிறாயா? இதோ....'' என்றது பூதம். அடுத்த விநாடி சிங்கத்தின் பயங்கரமான கர்ஜனை கேட்டது கூடத்தில். பீதியினால் பூனை கீச் மூச்சென்று பதறிப் பயந்து நடுங்கிக் கூடத்தின் மூலைக்கு மூலை ஓடியது பதுங்கிக் கொள்ள. பூதம் இருந்த இடத்தில் சிங்கம் தன் கோரமான வாய் திறந்து சிரித்துக் கொண்டிருந்தது. பூனையின் பதறலும் உதறலும் அதற்கு மகிழ்ச்சியாக இருந்தது. பூட்ஸ் போட்ட பூனை நிஜமாகவே பயப்படுவதாக எண்ணிவிட்டது முட்டாள் பூதம்.

''மாண்புமிகு பூதமே! உங்கள் திறமையில் சந்தேகம் கொண்ட என்னை மன்னித்துவிடுங்கள். நான் எண்ணியதைவிட நீங்கள் மகத்தான பராக்கிரமம் மிக்கவர். ஆனாலும் இந்தச் சிறியேனுக்கு ஒரு சின்ன ஐயப்பாடு. உங்களைப் போன்ற வல்லமையும் சாகஸமும் மிக்கவர்கள் கம்பீரமான மிருக ராஜனான சிங்கமாகத்தான் மாறுவீர்கள். ஆனால் உங்களால் மிக மிகச் சிறிய, சாதாரணமான, மதிப்பற்ற, கேவலமான ஒரு ஜந்துவாக மாற முடியுமா? உதாரணத்துக்கு ஒரு சுண்டெலியாக. ஆனால் கௌரவம் மிக்க உங்களால் அது முடியாது என்றே நம்புகிறேன்'' என்றது.

''முடியாதா?'' கூச்சலிட்டது பூதம். ''முடியாது என்பதே கிடையாது, என்னிடம், தெரியுமா? கேடுகெட்ட பூனையே இதோ பார்...'' என்றதும் அந்தப் பெரிய கூடத்தின் குறுக்கே ஒரு சின்னச் சுண்டெலி கீச்கீச்சென்று ஓடியது! பூட்ஸ் போட்ட பூனை ஒரே தாவில் அதன் மீது பாய்ந்து அதைப் பிடித்து ஒரே வாயில் போட்டு விழுங்கி, ''ஏவ்!'' என்று ஓர் ஏப்பமும் விட்டது.

கோட்டையிலிருந்த பூதத்தின் பணியாளர்களையெல்லாம் கூட்டியது.

''உங்கள் எஜமானரை நான் கொன்று தின்றுவிட்டேன். புதிய எஜமானர் வருவார். உங்களை அன்போடு நடத்துவார். ஆனால் நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் என்ன தெரியுமா? இந்தக் கோட்டை காரபாஸ் அதிபருக்கு உரிமையானது என்று சொல்ல வேண்டும், புரிந்ததா?'' என்று உத்தரவிட்டது. பூதத்திடமிருந்து விடுதலை பெற்றவர்கள் இதை மறுக்கவா செய்வார்கள்?



மழை, இடி, மின்னல்—ஒரு பரிசு!

இங்குள்ள படம் என்னவென்று தெரியுமா? வானத்தில் இடி உண்டாகிற தல்லவா? அதற்கு உரிய கடவுளாக ஜப்பானியர்களால் வணங்கப்படும் தேவதை இது. ஜப்பானியக் குழந்தைகளுக்கான கதைகளிலெல்லாம் இந்த இடிக் கடவுள் இடம் பெறத் தவற மாட்டார்.

இது ஜப்பானில். ஆப்பிரிக்காவில் ஒரு கதை உண்டு.....

நெடுங் காலத்துக்கு முன்னால் இடியும் மின்னலும் மனிதர்களிடைதான் வாழ்ந்து வந்தார்கள். நகருக்கு வெளியே ஒதுக்குப்புறமான இடத்தில் அவர்களை வாழும்படி கூறி இருந்தார் அரசர். மின்னல் என்பது இளம் வெள்ளாடு. இடி என்பது அவள் மகன் முரட்டுச் செம்மறியாடு. செம்மறியாட்டுக்குக் கோபம் வந்தால், வீடுகளையும், மரங்களையும், வயல்களையும் எரித்து நாசம் விளைவிப்பான். சில நேரங்களில் மனிதர்களைக் கொன்றும் வந்தான்.

செம்மறியாடு இம்மாதிரி அட்டூழியம் செய்யும்போதெல்லாம் அதன் தாயார் பெருத்த குரலில் கண்டிப்பாள். அதுதான் இடி. ஆனால் மகன், தாயின் வார்த்தையைப் பொருட்படுத்த மாட்டான். தொடர்ந்து மின்னலால் தாக்கி அழிப்பான். தாயார் இன்னும் பலமாகக் கோபிப்பாள். இந்தக் கூச்சலும் கொளுத்தலும் தாங்காத மக்கள் மன்னனிடம் முறையிட்டார்கள். அரசர், இடி மின்னலை நகரை விட்டுப் போய் தொலைவிலுள்ள காட்டில் வாழ உத்தரவிட்டார். ஆனால் மின்னலின் அட்டூழியம் நிற்கவில்லை. அவனுக்குக் கோபம் வரும்போது காட்டையே பஸ்மமாக்கினான். சில வேளைகளில் அதன் தீ நாக்குகள் வயல் வெளிகளையும் கபளீகரம் செய்தன. மக்கள் மறுபடியும் மன்னரிடம் முறையிட்டனர். அரசர் இடி, மின்னல் இருவரையும் பூமியிலிருந்தே விரட்டி விண்ணிலே போய் வசிக்கச் செய்தார். அங்கு அவர்களால் அதிக நாசத்தை உண்டாக்க முடியவில்லை. இடியும் மின்னலும் வானுலகத்துக்குப் போன கதை இப்படித்தான்.

இதே மாதிரி உங்கள் வீட்டிலுள்ள பெரியவர்களிடம் மழை, இடி, மின்னல் இவைகளைப் பற்றிப் பழங் கதைகள் ஏதாவது இருக்கிறதாஎன்று கேளுங்கள். அவர்கள் சொல்லும் அந்தக் கதையை அப்படியே அழகாக எழுதி அனுப்புங்கள். கதை கோகுலத்தில் இரண்டு பக்கங்களுக்கு மேல் வரக் கூடாது. **சிறப்பான கதைக்கு ரூ 25/- பரிசு அளிக்கப்படும்.** கதை அனுப்பும் உறையின் மீது, '**மழை இடி மின்னல் கதை**'—என்று மறக்காமல் குறிப்பிடவும். கதைகளை ஆகஸ்டு 15 தேதிக்குள் 'ஆசிரியர், கோகுலம், கல்கி பூங்கா, சென்னை — 31 என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

XXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXX

மாலையில் கோச்சு வண்டி கோட்டையை நோக்கி வந்து கொண்டிருந்தது. தொங்கு பாலம் தழைத்துண்டப்பட்டது. அகழியைத் தாண்டி கோட்டைக்குள் கோச்சு புகுந்ததும் வரிசை கட்டி நின்ற பணியாளர்கள் ராஜ மரியாதை கொடுத்து வரவேற்றார்கள். பூட்ஸ் கால் பூனை ஓடோடி வந்து வண்டியின் கதவைத் திறந்து, ''வருக, வருக! மன்னரே, வருக! காரபாஸ் நகர அதிபரின் கோட்டைக்கு உங்களை வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்'' என்று இடுப்பை வளைத்து வணங்கியது.

மன்னருக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. வியப்பான வியப்பு! ''வாலிபரே, இந்தக் கோட்டையும் உங்களுடையதுதானா? என் மருமகனாக வருவதற்கு எல்லாத் தகுதிகளையும் பெற்றவர்தான் நீங்கள்'' என்றார்.

பூனையார் கொடுத்த விருந்துக்குப் பிறகு மன்னர் தம் எண்ணத்தை உறுதிப்படுத்திக் கொண்டார். இதற்குள் வாலிபனும் இளவரசியும் நிலாமுற்றத்தில் தனியாக அமர்ந்து உல்லாசமாக உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

விரைவிலேயே மாவு அரைக்கும் தொழிலாளியின் மூன்றாவது மகனுக்கும் மன்னரின் ஒரே அழகு மகளுக்கும் அதி விமரிசையாகத் திருமணம் நடந்தது. கொஞ்ச நாளில் அவனே அந்நாட்டின் மன்னனானான். பூட்ஸ் கால் பூனை வைத்ததுதான் அரண்மனையில் சட்டம். அந்தப் பூனை அதன் பிறகு எந்த எலியையுமே தின்னவில்லையாம்!

உல்லாசப் பயணம்

அழ. வெ. ராமசாமி

"பள்ளிக்கூடத்திலே எல்லாரும் உல்லாசப் பயணம் போகிறார்கள். நானும் போகத்தான் வேணும்!'' என்றான் முரளி பிடிவாதமாக.

அப்பா ராமநாதன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ''நான் சம்பாதிக்கிறது குடும்பச் செலவுக்கே போதமாட்டேன் என்கிறது. இது மாசக் கடைசி. என்னிடம் பணம் இல்லை. இந்தத் தடவை போகா விட்டால் என்ன? அடுத்த தடவை போய்க் கொள்ளலாம்!'' என்று பொறுமையாகச் சொன்னார்.

ம்ஹூம். முரளி தன் பிடிவாதத்தை விடவேயில்லை. அவரும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். அவன் முதுகில் இரண்டு அறைகள் வைத்துவிட்டு அலுவலகத்துக்குப் புறப்பட்டுப் போனார். தடுமாற்றத்தில் மத்தியான







டிபனைக்கூட எடுத்துப் போக மறந்து விட்டார்.

அவருக்கு மனசு சரியில்லை.

திருமணமாகி வெகு காலத்துக்குப் பிறகு அருமையாகப் பிறந்த பிள்ளை முரளி. அதனால் செல்லம் கொடுத்து வளர்த்து விட்டார்கள். சில சமயம் பெற்றோர்கள் சொல்லுவதையும் கேட்பதில்லை அவன்.

பள்ளிக்கூடத்திலே மைசூருக்கு உல்லாசப் பயணம் போவதாகவும், கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் ஆசிரியர் சொன்ன போது முரளியும் தன் பெயரைப் பதிந்து கொண்டான்.

மைசூர், பிருந்தாவனம், அழகியநந்தி, சோமநாதபுரம், கேசவப் பெருமாள் கோயில், கோமதீசுவரர் சிலை, அரண்மனை, ஜோக் நீர் வீழ்ச்சி... என்றெல்லாம் சரித்திர ஆசிரியர் வர்ணித்து ஆசையைத் தூண்டி விட்டார்.

வீட்டுக்கு வந்து விஷயத்தைச் சொன்னால், அப்பா மறுக்கிறார். இனி, மற்றப் பையன்களின் முகத்தில் எப்படி விழிப்பது? அவர்கள் கேலி பண்ண மாட்டார்களா?

அடி வாங்கிக்கொண்ட முரளி அன்று முழுவதும் அழுது கொண்டேயிருந்தான். அம்மாவும் சமாதானப் படுத்திப் பார்த்தாள். ''இன்னொரு சமயம் போகும்போது, நானே உனக்குப் பணம் தருகிறேன். அழாதே... ஆனாலும் உன் அப்பாவுக்கு இவ்வளவு கோபம் வேண்டாம். பார்—பிள்ளையின் முதுகில் எப்படி அறைந்திருக்கிறதை!'' என்று கணவன் பேரில் பொய்க் கோபம் காட்டிப் பேசினாள்.

முரளி சாப்பிடவே யில்லை. 'பணம் கொடுத்தால்தான் சாப்பிடுவேன்' என்று தீர்மானமாகச் சொல்லி விட்டான். அதே கவலையில் அம்மாவும் சாப்பிடவில்லை. அவளுக்கு வீட்டு நிலைமை புரிந்தது; பிள்ளையின் மனசும் புரிந்தது. அதனால் தர்மசங்கடமாக இருந்தது.

அப்பா ராமநாதன் சாயந்திரம் அலுவலகத்திலிருந்து வந்தார். ஆயாசத்துடன் சாய்வு நாற்காலியில் சாய்ந்தார்.

''இதோ பாருங்கள். உங்கள் சிநேகிதர்கள் யாரிடமாவது இருபத்தைந்து ரூபாய் பணம் கைமாற்றாக வாங்கி வாருங்களேன். பாவம், அவன் இன்று முழுவதும் சாப்பிடவேயில்லை!'' என்றாள் அம்மா.

''மாசக் கடைசி. யாரிடம் 'பணம் இருக்கும்? ஒருத்தரிடம் போய்க் கை மாற்றுக் கேட்பதற்கே எனக்குக் கூசுகிறது. பழக்கமில்லை. 'என் பிள்ளை உல்லாசப் பயணம் போக வேண்டுமாம்;

கடன் கொடுங்கள்' என்று கேட்டால் சிரிப்பார்கள்!'' என்றார் அவர்.

''அதைச் சொல்லி ஏன் கேட்கிறீர்கள்? ஏதோ அவசரச் செலவுக்கு என்று கேளுங்களேன்...''

அவர் தமக்குள் என்னவோ முணுமுணுத்தபடி சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டு கிளம்பினார்.

விளக்கு வைக்கிற நேரத்தில் திரும்பி வந்தார்.

''இந்தா, இந்தப் பணத்தை உன் அருமைப் பிள்ளையிடம் கொடு. நம்ம சீனிவாசனிடம் கேட்டு வாங்கி வந்தேன். இனிமேலாவது உன் பிள்ளையைச் சாப்பிடச் சொல்லு!'' என்றார் சிடுசிடுப்புடன்.

மறு நாள் காலை.

''முரளி, முரளி'' என்று வாசலில் யாரோ கூப்பிட்டார்கள். முரளி கதவைத் திறந்தான்.

சீனுவாசனின் பிள்ளை பாலு நின்று கொண்டிருந்தான். அவனும் முரளியின் கூடப் படிக்கிறவன்.

அவனைப் பார்த்ததும் முரளி ''பாலு, பாலு! நானும் உன்கூட மைசூருக்கு வருகிறேன்!'' என்றான் உற்சாகமாக.

''ஆனால், நான்தான் வர முடியாதுடா, முரளி!'' என்றான் பாலு.

''ஏன்?''

''மைசூருக்குப் போகலாம் என்றுதான் அப்பா என்னிடம் இருபத்தைந்து ரூபாய் பணம் கொடுத்திருந்தார். நேற்று சாயங்காலம் உன் அப்பா வந்து என் அப்பாவிடம் இருபத்தைந்து ரூபாய் பணம் கைமாற்றாகக் கேட்டாராம். அப்பா என்னிடம், 'பாவம், அவருக்கு என்ன நெருக்கடியோ, என்னிடம் இப்போது பணம் இல்லை. உன்னிடம் கொடுத்த பணத்தைக் கொடு. அவரிடம் கொடுத்து விடுகிறேன். நீ இன்னொரு சமயம் உல்லாசப் பயணம் போய்க் கொள்ளலாம்' என்றார். எனக்கும் அது நியாயமாகப் பட்டது. மைசூர் எங்கே ஓடியா போய் விடப் போகிறது? அப்புறமாகப் பார்த்துக்கொண்டால் ஆயிற்று என்று பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டேன். அப்பா சொல்வதெல்லாம் சரியாகத்தான் இருக்கும். அவர்கள் சொல்லுவதை நாம் கேட்டால்தான் அவர்களுக்கும் நம்மேல் பிரியம் இருக்கும்....!'' என்றான் பாலு.

பக்கத்து அறையிலிருந்து ராமநாதன் இதைக் கேட்டுக்கொண்டுதான் இருந்தார்.

முரளி சற்றுநேரம் பிரமித்துப் போய் நின்றுவிட்டான்.

''பாலு, அந்தப் பணத்தை எனக்காகத்தான் அப்பா வாங்கி வந்தார். நீ இவ்வளவு நல்ல மனசுடன் திருப்பிக் கொடுத்திருக்கிறபோது, நான் மட்டும் அதை வாங்கிக்கொண்டு போகலாமா? அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடச் சொல்லுகிறேன். நீ உல்லாசப் பயணத்தில் கலந்து கொள்ளலாம் பாலு!'' என்றான் முரளி.

''வேண்டாம், முரளி !''

''அப்படியானால் நாமிருவரும் இன்னொரு தடவை சேர்ந்தே போய்க்கொள்ளலாம்'' என்றான் முரளி. பிறகு, பணத்தை எடுத்துக் கொண்டு ''அப்பா! அப்பா!'' என்று கூப்பிட்டுக் கொண்டே அப்பாவின் அறைக்கு ஓடினான்.


அப்பா ராமநாதன் சிரித்துக்கொண்டார். அம்மா அவரை ஜாடையாகப் பார்த்தாள்.




உன் தம்பிக்கு உடல் நலமில்லாதிருந்தபோது அப்பா வாங்கி வந்த ரொட்டியில் ஒரு துண்டு கவனிக்கப் படாமல் இரண்டு மூன்று நாள் அலமாரியில் கிடந்தது. ஒரு நாள் நீ அதைப் பார்த்தபோது அதில் கறுப்பும் பச்சையுமாக ஏதோ தாவரம் போன்ற ஒன்று வளர்ந்திருப்பதைக் காண்கிறாய். அப்பா இதைப் 'பூஞ்சக் காளான் பூத்து விட்டது, தூர எறி' என்கிறார். இந்தக் காளான் ரொட்டியில் எப்படி வளர்ந்தது? எங்கிருந்து வந்தது? காளான் என்பது புஷ்பிக்காத ஒரு வகைத் தாவரம். இதன் ஜீவ அணுக்களுக்குத் தங்க இடமும் உண்ண உணவும் கிடைக்குமானால் உடனே இவை பல்கிப் பெருகி வளர்ந்துவிடும்.

சூட்சுமதரிசினியின் மூலமாக வலை பின்னியது போன்ற காளான்களைப் பார்த்தால்ஏராளமான நிறமற்ற நீண்ட நூல் போன்ற அமைப்போடு அவை இரு கிளைகளாகப் பிரிந்து இருப்பதைக் காணலாம். ஒரு கிளையின் உச்சியில் கறுப்பாகப் பந்து போன்ற ஓர் அமைப்பு இருக்கும். இந்தப் பந்துகளுக்குள்தான் காளானின் ஜீவ அணுக்கள் அடங்கியுள்ளன. மற்றொரு கிளை — இது குட்டையானது- ரொட்டியினுள் ஊடுருவிச் செல்வதைக் காணலாம். தாவரங்களின் வேர்களைப் போல உணவுச் சத்தைக் கிரகித்துக் கொள்ளும் காரியத்தை இவை செய்கின்றன. காளான் ஒரு வகைத் தாவரம்தான். இவற்றால் தன்னிச்சையாக வளர முடியாது. பழங்கள், உணவுப் பண்டங்கள், தோல் பொருள்கள் இவைகளைக் கவனக் குறைவாக ஈரப் பசையும் கதகதப்பும் உள்ள திறந்தவெளியில் வைத்து விட்டால் காளானின் ஜீவ அணுக்கள் இதில் தாக்குதல் நடத்தி வளர ஆரம்பித்துவிடும்.

ரொட்டித் துண்டில் உற்பத்தியாகும் பச்சை நிறக் காளானுக்குப் பெனிஸிலியம் க்ளாகம் *(Penicillium Glaucum)* என்று பெயர். இதே போன்று நிலத்தில் உற்பத்தியாகும் ஒரு வகைக் காளானுக்குப் பெனிஸிலியம் நோடாடம் *(Penicillium Notatum)* என்று பெயர். இந்தக் காளானிலிருந்துதான் புகழ்பெற்ற உயிர் காக்கும் பெனிசிலின் என்றமருந்து தயாரிக்கப்படுகிறது.





தேளைப் பற்றி...


பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பது பழமொழி. அதேபோல் தேள் என்றால் யாருமே துள்ளிக் குதிப்பார்கள். தேள் என்றாலே, விஷம், கடுப்பு, அவஸ்தை, அபாயம் இத்தனையும் உள்ளத்தில் தோன்றுமே! பார்ப்பதற்கும் அருவருப்பான ஒரு ஜீவன் இது.

சிலந்தி இனத்துக்கு உறவு தேள்! நாலு ஜதைக் கால்கள். இதனால் இது நடக்க முடியும். கைகளைப் போல, இரையைப் பற்றிக் கொள்ள முன்னால் ஒருவகைச் சாதனம் (பின்ஸர்ஸ்). பின்னால் மெல்லிய நீண்ட பல இணைப்புக்களால் ஆன வால். அதன் நுனியில் வளைந்த ஒரு கொட்டும் கருவி. இது விஷச் சுரப்பியோடு இணைக்கப்பட்டிருக்கும். தேள் நடக்கும் போது இதன் வால் உடலுக்கு மேலே குடை பிடித்த மாதிரி வளைவாகத் தூக்கிக் கொண்டிருக்கும். இரையைக் கைகளால் பற்றிக் கொண்டதும் மேலுள்ள வால் வளைந்து உணவாகப் போகும் இரையின் உடலில் விஷ முள்ளைப் பதித்துக் கொட்டும். தேள் விஷம், ஒன்று கொட்டப்பட்ட ஜந்துவைக் கொன்றுவிடும் அல்லது செயலிழக்கச் செய்யும்.

தேள் இரவு வேளையில்தான் சஞ்சரிக்கும். பகல் வேளைகளில் இருண்ட பகுதிகளில் கல்லின் கீழேயோ மரப்பட்டைகளுக்குள்ளேயோ, கட்டடங்களின் இருண்ட இடுக்குகளிலோ மறைந்திருக்கும்.

நன்கு வளர்ந்த தேள் தனியாகவே வாழும், இரை தேடித் திரியும். தேள் குட்டிகள் பிறக்கும் போதே முழுத் தோற்றத்துடன் வெளி வரும். தாயின் முதுகில் ஒட்டிக் கொண்டு வாழும். தாய்த் தேள் குட்டிகளுக்கு உணவூட்ட மாட்டாள். வெறுமனே சுமப்பதோடு சரி. சில நாட்களுக்கப்புறம் குட்டித் தேள்கள் தன்னிச்சையாக நடமாட ஆரம்பிக்கும்.

தேள்கள் உஷ்ணப் பிரதேசங்களிலேயே காணப்படுகின்றன. 500 வகைகள் இருக்கின்றன. அரை அங்குலத்திலிருந்து ஏழு அங்குலம் வரை தேள்கள் உண்டு. நிறத்திலும், தோற்றத்திலும் மாறுபாடுடையதும்கூட. தேள் கடித்து மரணம் ஏற்படுவதும் உண்டு. நம் நாட்டிலும் கொடிய விஷமுடைய தேள்கள் உண்டு.



பைனியல் சுரப்பி

நம் உடலில் பலவிதமான நீர்களைச் சுரக்கச் செய்யும் உறுப்புக்கள் உள்ளன. இவைகளைச் சுரப்பிகள் — க்ளாண்ட்ஸ் — என்கிறோம். முக்கியமாக கிளாண்ட்ஸ் என்ற பெயர் உடலுக்குள்ளே உள்ள சுரப்பிகளுக்குத்தான் சொல்லுவது. இவைகளை எண்டாக்ரின் கிளாண்ட்ஸ் (Endocrine Glands) என்பார்கள். தாங்கள் உற்பத்தி செய்யும் சத்துக்களை இவை குழாய்கள் வழியாக அனுப்புவதில்லை. ஆகவே இவற்றுக்கு 'டக்ட்லெஸ் க்ளாண்ட்ஸ்' என்றும் பெயர். இவ்விதச் சுரப்பிகள் உற்பத்தி செய்யும் பொருளை ரத்தம் நேரிடையாகவே கிரகித்துக் கொள்ளுகின்றன.

இப்படி உடலுக்குள் சுரக்கும் இத்தகைய நீர்களுக்கு 'ஹார்மோன்ஸ்' என்று பெயர். ஹார்மோன்களை இரசாயனத் தூதுவர்கள் என்று கூறலாம். ரத்த ஓட்டத்தில் உடல் முழுதும் பரவிப் பலன் தரக் கூடியவை. அவைகளில் முக்கியமானவை தைராய்டு, பாரா தைய்ராய்டு, தைமஸ், பைனியல், பிட்யூட்டரி, அட்ரினல், இப்படி இன்னும் சில.

பைனியல் சுரப்பி எண்டாக்ரின் சுரப்பிகளில் ஒன்று. இது எத்தகைய ஹார்மோனை உற்பத்தி செய்கிறது என்பது இது வரை அறியப்படவில்லை... ஆனால் இந்தச் சிறிய உறுப்பு மர்மங்கள் நிறைந்த ஒன்று.

இந்தச் சுரப்பி உடலில் எங்கே உள்ளது? சிறிய மாத்திரை போன்ற இது மூளையின் மத்தியப் பாகத்தில், உச்சந்தலைப் பக்கமாக இருக்கிறது. இது அமைந்திருக்கும் இடத்தைக்கொண்டு பண்டைய மருத்துவர்கள் இது மனிதனுடைய சிந்தனை சக்தியை வளமாக்கும் சுரப்பி — ஆன்மாவின் ஆசனம் — என்று கருதினார்கள். சிலர் இதை மனிதனின் மூன்றாவது கண் (நெற்றிக் கண்) என்று கூட வர்ணித்தனர். ஆனால் இன்றைய ஆராய்ச்சிகளின்படி இது ஏதோ ஒரு ஹார்மோனைச் சுரக்கச் செய்கிறது அல்லது மற்ற எண்டாக்ரின் சுரப்பிகளின் வேலைக்கு உதவுவதாக உள்ளது என்பது மட்டுமே தெரிய வந்துள்ளது. பிட்யூட்டரி சுரப்பிக்கு மிக அருகே இது இருப்பதால் அந்தச் சுரப்பிக்கு இதனால் ஏதோ ஒரு வகையில் பலன் இருக்கலாமோ என்னவோ?

முதல் சர்வகலாசாலை

மேலை நாட்டினரின் கருத்துப்படி 'காலேஜ்' என்ற வார்த்தைக்கு என்ன பொருள்? ஏதாவது ஒரு சங்கம், அல்லது ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் கூடி ஒரு பொதுக் காரியத்தில் ஈடுபடுவதற்குக் காலேஜ் என்று பொருள். போப் பாண்டவரைத் தேர்ந்தெடுக்க கார்டினல்களின் காலேஜ் இருக்கிறது. அமெரிக்க ஜனாதிபதி, உப ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க வாக்காளர்களின் காலேஜ் (Electoral College) உள்ளது.

மத்திய காலத்தில், பொது நன்மையைக் கருதி ஒரு கார்ப்பொரேஷனோ, சொஸைட்டியோ செயல்படுமானால் அதை யுனிவர்ஸிடி என்று அழைத்தார்கள். ஆகவே ஆரம்ப சர்வ கலாசாலை என்பது பேராசிரியர்களும் ஆசிரியர்களும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஏற்படுத்திக்கொண்ட ஓர் அமைப்பாகவே இருந்தது. ஆரம்பத்தில் நிரந்தரமான கட்டிடங்கள் ஏதும் இருக்கவில்லை.

காலப் போக்கில் இந்த அமைப்பு வளரவே இதற்குத் தனியான கட்டிடங்கள் கட்டப்பட்டன. சலுகைகளும் சட்ட திட்டங்களும் உருவாக்கப்பட்டன. சர்வ கலாசாலை என்பது நிரந்தரமானதோர் அமைப்பாகியது. இத்தகைய முதல் சர்வ கலாசாலை இத்தாலியில் சாலர்னோ என்னுமிடத்தில் தோன்றியது. ஒன்பதாம் நூற்றாண்டில் இது மருத்துவக் கலைக் கூடமாகத்தான் விளங்கியது. 1231ல் இது சர்வ கலாசாலையாகியது. பனிரெண்டாம் நூற்றாண்டின் முடிவில் இத்தாலியில் உள்ள போலோனா (Bologna) என்னுமிடத்தில் நிறுவப்பட்ட சர்வ கலாசாலையில் சட்டம், மருத்துவம், கலைகள், வேதாந்தம் முதலியவை கற்பிக்கப்பட்டன. ஐரோப்பாவில் பிற்காலத்தில் தோன்றிய பல சர்வ கலாசாலைகளுக்கு முன்னோடியாகவும் எடுத்துக் காட்டாகவும் விளங்கியது பாரிஸ் சர்வ கலாசாலைதான். இங்கிலாந்தில் உள்ள இரு பழம் சர்வ கலாசாலைகளான ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் ஆகியவை பாரிஸ் சர்வ கலாசாலையை மாதிரியாகக் கொண்டமைக்கப்பட்டவையே. ஒரு சர்வ கலாசாலை என்பது பல கலாசாலைகளை உள்ளடக்கியதாக இருக்கும்.




ஜெய் ஹனுமான் 16
கதை: ரா.கணபதி
சித்திரம்: விஜு
நெடுந்தூரம் பறந்து வந்திருப்பேன். ஆயினும் எனக்குக் களைப்பே ஏற்படவில்லையே. மாறாக உடலிலே புதிய பலம் கூடியது போலுள்ளது. இது ஸ்ரீராமபிரானின் அருள்தான்.
அதோ வருகிறார் மாருதி. அவர் வரும் வழியில் நெடி துயர்ந்து நிற்கிறேன். என் மீது தங்கி இளைப்பாறட்டும்.
நடுக்கடலில் திடீரென முளைக்கிறதே ஒரு மலை. இது யாரோ அசுரனுடைய காரியம்தான். ராம்...ராம்... இந்த மலையை என் மார்பினால் முட்டித் தள்ளி முன்னேறிப் போகிறேன்.
மாருதி! நான் உன் பகைவனல்ல. கடலரசன் கட்டளைப்படி உமது களைப்பைப் போக்கி அனுப்ப வந்த நண்பன் நான்.
அப்படியா? ராமகாரியம் காலதாமதமாகக் கூடாது. வெற்றியோடு திரும்பும் காலில் உன் மீதமர்ந்து உபசாரத்தை ஏற்றுக்கொள்வேன். இப்போது என்னை வற்புறுத்தாதே...
இதே சமயத்தில் வானவீதியில் தேவர்களும் பிரும்மரிஷிகளும்...
ஹனுமானுக்கு தேகபலம் இருக்கலாம். எடுத்த காரியத்தைச் சாதிக்கும் புத்தி பலம் இருக்குமா?
அதையும் சோதித்து விடுவோமே



தேவர்கள் சர்ப்பங்களின் தாயான சுரஸையை வரவழைக்கிறார்கள்
சுரஸே! அதோ வாயு வேகமாக வான வீதியிலே பறந்து வரும் ஹனுமனை விழுங்கும் அளவுக்கு விசுவரூபமெடுத்துக் கொண்டு அவனை வழி மறித்து
சுரஸை தேவர்களின் கட்டளைப்படி மாருதியின் வழியில் நின்று தன் வாய்க்குள் புகுந்து போகுமாறு சொல்லுகிறாள்.
நீ என் வாய்க்குள் புகுந்துதான் வெளியே போகவேண்டும் என்று தேவர்களும் ரிஷிகளும் என்னை அனுப்பியிருக்கிறார்கள் என்று கூறு, போ...
அம்மணி, தேவர்களுடைய கட்டளையை மீறமுடியாதுதான். ஆனால் ராமகாரியமாகப் போகிறேன். அதை முடித்து ராமனுக்கு ஆறுதல் கூறிவிட்டு அவசியம் உன்னிடம் வருகிறேன். இது சத்தியம்...
பலே, பலே! ஹனுமன் பலவானாக இருந்தும் சுரஸையை எதிர்க்காமல் நம் கட்டளைக்கு மதிப்புக் கொடுத்த அவன் பலவான் மட்டுமல்ல குணவானும் புத்திமானுமாவான். இன்னும் பார்ப்போம்.
அதுவரை காத்திருக்க முடியாது. இப்போதே நீ என் வாய்க்குள் புகுந்துதான் ஆகவேண்டும். நீயாகப் போகாவிடில் நான் உன்னை விழுங்கி விடுவேன்.
தொடரும்



புளூட்டோ கிரகம்

கிருஷ்ணவேணி

சூரியப் பாதையில் வானியல் வல்லுநர்களால் இன்று வரை கண்டு பிடிக்கப் பட்டுள்ள கிரகங்களில் கடைசியானது புளூட்டோதான். இதுதான் முடிவா என்று கேட்டால் அதற்குப் பதில் திட்ட வட்டமாகக் கூற முடியாது. சூரியனுக்கு மிக அருகேயுள்ள கிரகம் **மெர்க்குரி** (புதன்) மிக தூரத்தில் கடைசியாக உள்ள கிரகம் **புளூட்டோ.** இவ்விரு கிரகங்களுமே உருவத்தில் சிறியவை. மெர்க்குரியின் ஒரு பக்கம் எப்போதுமே படு பயங்கரமான உஷ்ணத்துடனும் மறு பக்கம் படுபயங்கரமான குளிர்ச்சியுடனும் இருக்கிறது. புளூட்டோவின் எல்லாப் பகுதியும் எப்போதும் மிக மிகக் குளிர்ச்சியாக—மைனஸ் 400 டிகிரி ஃபாரன்ஹீட்டாக இருக்கிறது.

வானிலே வல்லுநர்கள் இந்தக் கிரகத்தை எப்போது எப்படிக் கண்டுபிடித்தார்கள்?

நெப்டியூன், யுரானஸ் கிரகங்களின் சுற்றும் பாதையைக் கணக்கிடும்போது அதில் காணப்பட்ட மாறுபாடு இவ்விரு கிரகங்களுக்கும் அப்பால் இன்னொரு கிரகம் இருக்க வேண்டும் என்ற முடிவை உண்டாக்கியது. இத்தகைய முடிவுக்கு வித்திட்டவர் **பெர்சிவல் லோவெல்** என்பவர். சந்தேகத்துக்கு இடமான இந்தக் கிரகத்துக்குப் 'பிளானட் எக்ஸ்' என்று பெயரிட்டார் லோவெல். இதைப் பற்றிய ஆராய்ச்சியை 1905-ம் ஆண்டு ஆரம்பித்தார். தொடர்ந்து ஆராய்ந்து வரலானார். ஆனால் 1916ல் லோவெல் காலமானார். அப்போதும் 'பிளானட் எக்ஸ்' முழுமையாகக் கண்டு பிடிக்கப்படவில்லை. நெப்டியூனுக்கு அப்பாலுள்ள கிரகத்தைப் பற்றி ஆராயும் முயற்சியில் அடுத்து ஈடுபட்டவர், ஹார்வர்டு காலேஜ் ஆப்ஸர்வேட்டரியைச் சேர்ந்த **டபிள்யு. எச். பிக்கரிங்** என்பவர். லோவெல் யுரானஸ் கிரகத்தின் சுற்றுப் பாதையின் கணக்குகளைக் கொண்டு புளூட்டோவைக் காண முயன்றார். பிக்கரிங் நெப்டியூன் ஓட்டத்தைக் கொண்டு புதிய கிரகத்தை இனம் காண முயன்றார். இவராலும் முடியவில்லை. 1919ல் மௌண்ட் வில்ஸன் ஆப்ஸர்வேட்டரியில் **மில்டன் ஹூமாசன்** என்பவர் புதிய கிரகத்தைக் காணும் முயற்சியில் ஈடுபட்

டார். வான மண்டலத்தையும் சூரியப் பாதையையும் பிரத்தியேகமான காமிராவின் உதவியினால் ஏராளமான புகைப் படங்கள் எடுத்து ஆராயலானார். ஆனால் புதிய கிரகத்தை இனங் கண்டு கொள்ள இவருக்கும் அதிர்ஷ்டமில்லை.

அரிஸோனா மாநிலத்தில் உள்ள பிளாக் ஸ்டாஃப் என்னுமிடத்தில் ஒரு வானிலை ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. இதில்தான் லோவெல் தம் ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். இதில் பணி புரியும் வான சாஸ்திரிகள் லோவெல் இருக்க வேண்டுமென்று உத்தேசமாகக் கருதிய புதிய கிரகத்தைக் காணும் முயற்சியை 1929ல் மறுபடியும் புதுப்பிக்கத் தொடங்கினர். **க்ளைடு டாம்பாக்** என்பவர் காமிராவின் உதவியால் சூரியப் பாதையில் பல புகைப்படங்களை எடுத்துப் புளூட்டோ கிரகத்தைக் காண முற்பட்டார். 7000 மணிகள் ஆராய்ச்சிக்குப் பிறகு 1930ல் டாம்பாஃக் தாம் தேடிய கிரகம் வான வீதியில் தட்டுப்பட்டதைக் கண்டார். எதிர்பார்த்த இடத்துக்கு மிக அருகிலேயும் எதிர்பாராத விதமாக மங்கலானதாகவும் புளூட்டோ தட்டுப்பட்டது. சூரியப் பாதையில் ஒன்பதாவது கிரகம் கண்டுபிடிக்கப் பட்டு விட்டது.

இத்தனை வருஷங்கள் பலர் இதைக் காண முயன்றுகொண்டிருக்கும்போதே புதிய கிரகம் தென்படுமானால் அதற்கு என்ன பெயரிடுவது என்பதை விஞ்ஞானிகள் முடிவு கட்டி வைத்திருந்தார்கள். (லோவெல் இதற்கு 'எக்ஸ்' என்று மட்டுமே ஒரு குறிப் பெயரிட்டிருந்தார்.) ரோமானியர் களின் கடவுளான புளூட்டோ. கிரேக்கக் கடவுளான ஹேடீஸுக்குச் சமமானவர். பூமிக்குக் கீழேயுள்ள செல்வங்களின் அதிபதி: சாடர்னின் (சனி) புதல்வர் இந்தப் புளூட்டோ.



புளூட்டோவின் மேல் பரப்பு எப்படி இருக்கும் என்பதைக் காட்டுகிறது இக் கற்பனைப் படம். சூரியன் அங்கு பிர காசமான நட்சத்திரமாகவே தெரி யும். குளிர் என்றால் பயங்கரமான குளிர். எதையும் திரவநிலையில் காண முடியாது. உறைந்து போன நிலையிலேயே எதுவும் இருக்கும். புளூட்டோவிற்கு அப்பால் விண் வெளியையும் நட்சத்திரக் கூட்டங் களையும் காணலாம்.

எல்லோரும் எதிர்பார்த்தபடி புளூட்டோ மிகப் பெரிய கிரகமாக இருக்கவில்லை. பூமியை விடவும் சிறியதாக இருந்தது. அதன் சுற்றுப் பாதை ஒரு நிலையில் நெப்ட்யூனின் பாதைக்குள் வந்தது. அப்போதிருந்த தூரதரிசினிகளினால் புளூட்டோவின் நிலையை முழுமையாக ஆராய முடியவில்லை. அதற்கான சக்தி அவைகளுக்கு இல்லை. பலோமார் என்ற இடத்தில் 200 அங்குலக் குறுக்களவுள்ள லென்ஸ் பொருத்திய தூரதரிசினி 1948ல் நிறுவப்பட்டது. அதிலிருந்து புளூட்டோவை ஆராய்ந்தபோது அது செவ்வாய் கிரகத்தையும் விடச் சிறியதாக இருப்பதைக் கண்டு வியந்தார்கள். இத்தனை சின்னக் கிரகமாக இருந்துகொண்டு யுரானெஸ், நெப்டியூன் போன்ற




ராட்சச கிரகங்களின் வேகத்தை ஈர்க்கும் சக்தியுடையதானால் பூமியைப் போல் பன்னிரண்டு மடங்கு அடர்த்தியுள்ளதாக இருக்க வேண்டும் இக்கிரகம் என்ற முடிவுக்கு வந்தார்கள். புளூட்டோவில் ஒரு சராசரி மனிதனின் நிறை 51 ஸ்டோன்களாக இருக்கும்!

சூரியனிலிருந்து புளூட்டோவின் தூரம் எவ்வளவு மைல்கள் தெரியுமா? 3671 மிலியன் மைல்கள். இந்தக் கிரகத்தின் குறுக்களவு 3600 மைல்கள். சூரியனை ஒரு முறை சுற்றிவர இதற்காகும் காலம் - அதாவது புளூட்டோவின் ஆண்டென்பது — 248 ஆண்டுகள். தன் இருசில் இது தன்னைத் தானே ஒருமுறை சுற்றிக்கொள்ள ஆறரை நாட்களாகின்றன. இதற்கு சாட்டலைட்டுகள் (சந்திரன்) ஏதும் கிடையாது. ஆனால் உறைந்த நிலையில் பலவித வாயுக்கள் இக்கிரகத்தின் மேற்பரப்பை மூடிக்கொண்டிருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். தாவரங்கள் கிடையாது. உறுதியான பாகம், பாறைகளைப்போல ஏதாவது இருக்குமா? தெரியவில்லை. சூரிய வெப்பம் உண்டு. ஆனால் நமது சந்திர ஒளியைப் போல வெப்பமில்லாமல் வெளிச்சம் மட்டும் இருக்கும்.

சூரியனிலிருந்து வரும் வெளிச்சத்தின் வேகம் ஒரு விநாடிக்கு 186,000 மைல்கள். இது பூமியை அடைய எட்டு நிமிஷங்களாகின்றன. புளூட்டோவைச் சென்றடைய ஐந்து மணியும் 30 நிமிஷங்களும் ஆகின்றன. சூரியப் பாதையில் புளூட்டோதான் கடைசிக் கிரகமா? இன்றைக்கு உள்ள விஞ்ஞான சாதனங்களின் சக்திக்கு இதுதான் கடைசிக் கிரகமாக விளங்குகிறது. வருங்காலத்தில் வளரும் விஞ்ஞானம் இன்னும் சக்தி மிக்க உபகரணங்களை உருவாக்கும்போது சூரியப் பாதையில் இன்னும் பல அற்புதங்களைக் காணக்கூடும். சூரியக் குடும்பத்தின் வேறு சில அங்கத்தினர்கள் புளூட்டோவுக்கும் அப்பாலுள்ள பயங்கரமான குளிர் மிகுந்த பாதைகளில் பவனி வந்து கொண்டிருக்கலாம்.

கோடிக்கணக்கான நட்சத்திரங்களில் சூரியனும் ஒரு நட்சத்திரம்தான். சூரியனுக்கு இத்தனை கிரகங்கள் இருப்பது போல — சூரியனைச் சுற்றி ஒன்பது கிரகங்கள் சுற்றி வருவதைப் போல—மற்ற நட்சத்திரங்களுக்கும் கிரகங்கள் இருக்கலாம். அந்தக் கிரகங்களை நாம் பூமியிலிருந்து கொண்டு காணவே முடியாது. வான மண்டலத்தில் இந்த ஒன்பது கிரகங்கள்தானா? இன்னும் எத்தனையோ அற்புதங்களையும் அதிசயங்களையும் மர்மங்களையும் கொண்டது விண்வெளி.



அணு என்றால் என்ன ?



நீங்கள் படிக்கும் இந்தப் பத்திரிகைக் காகிதம், நீங்கள் உட்கார்ந்திருக்கும் மர நாற்காலி, மையுள்ள இங்க் புட்டி, நீங்கள் அணிந்திருக்கும் ஆடைகள் — ஏன் உங்கள் மூக்கும்கூட மாலுகியூல்களால் ஆக்கப்பட்டவைதான் இவைகளுடைய ஒவ்வொரு மாலுகியூலும் ஏராளமான அணுக்களால் (forms) உருவாக்கப்பட்டவை. கார்பன், ஹைட்ரஜன், ஆக்ஸிஜன், நைட்ரஜன், பாஸ்பரஸ், கந்தகம், கால்சியம் இரும்பு இப்படிப் பல்வேறு பொருள்களின் அணுக்களாக அவை இருக்கலாம். இந்தப் பொருள்களினால்தான் இந்தப் புவியே உருவாக்கப்பட்டிருக்கிறது.

கொஞ்சம் கற்பனைக் குதிரை மீது ஏறிக் கொள்ளுங்கள். மேலே குறிப்பிட்ட பொருள்களையெல்லாம் (அவை அப்படி ஒன்றும் அதிகமில்லை. நூறு தான் இருக்கும்.) தனித் தனியே பாத்திரங்களில் நிரப்பி வைத்திருப்பதாகக் கொள்ளுவோம். அவைகளை ஒன்று சேர்ப்பதன் மூலம் நீரை உண்டாக்க முடியுமா ? முடியும். சுலபம்தான். இரண்டு ஜல வாயு அணுக்களையும் ஒரு பிராண வாயு அணுவையும் ஒன்று சேர்த்தால் தண்ணீரின் ஒரு மாலுகியூல் கிடைக்கும்.



ஒரு பொருளின் மாலுகியூலை உருவாக்க அதன் அங்கமான பல்வேறு அணுக்களை ஒன்று சேர்க்க வேண்டும்.

இதே மாதிரி ஒரு மூலப் பொருளோடு மற்றொரு மூலப் பொருளைக் கலந்து உலகில் உள்ள பல பொருள்களின் மாலுகியூல்களை உருவாக்கலாம். அது எப்படி என்பதை இன்னும் சுலபமாக விளக்க வேண்டுமானால் ஆங்கில எழுத்துக்கள் மொத்தம் எத்தனை ? இருபத்தாறுதானே ? ஆனால் இந்த இருபத்தாறு எழுத்துக்களை வைத்துக் கொண்டு எத்தனை எத்தனை ஆயிரம் லட்சம், கோடி வார்த்தைகளை உருவாக்குகிறார்கள்? இதே மாதிரி உலகில் உள்ள மொத்த ஆதாரப் பொருள்கள் நூறுதான். இந்த நூறு மூலப் பொருள்களை ஒன்றோடொன்று குறிப்பிட்ட விகிதங்களின் ஒன்று சேர்ப்பதின் மூலம் இவ்வுலகில் உள்ள அத்தனை பொருள்களும் உருவாக்கப்படுகின்றன.



தண்ணீரின் ஒரு மாலுகியூல் என்பது மூலப்பொருளான ஜலவாயு, பிராண வாயு அணுக்களின் கலவைதான் என்று கூறினோம் இல்லையா? ஒரு மின்சார பாட்டரியை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் பாசிடிவ் நெகடிவ் ஆகிய இரு துருவங்களிலும் செப்புக் கம்பிகளை இணையுங்கள். இக்கம்பிகளின் மறு முனைகளில் ஒவ்வோர் உலோகத் தகட்டை இணைத்து அந்தத் தகடுகளை ஒரு கண்ணாடிக் குடுவையில் உள்ள நீருக்குள் முங்கச் செய்யுங்கள். இப்போது இரு தகடுகளிலும் காற்றுக் கொப்புளங்கள் உருவாகி ஒட்டிக் கொண்டிருக்கும். நெகடிவ் முனைத் தகட்டில் அதிகக் கொப்புளங்களும் பாஸிடிவ் முனைத் தகட்டில் குறைவான காற்றுக் குமிழ்களும் இருக்கும். அதிகக் குமிழ்கள் உள்ளது ஜலவாயு. மற்றது பிராண வாயு. இரண்டு ஜல வாயு அணுவும் ஒரு பிராண வாயு அணுவும் கலந்தது தானே தண்ணீரின் ஒரு மாலிகியூல்?

நீரில் இப்படி மின்காந்தத்தை அதிக நேரம் பாய்ச்சிக் கொண்டிருந்தால் அத்தனை நீரும் வாயுக்களாகப் பிரிந்து விடும். இப்படி ஒரு பொருளின் ரசாயனக் கூட்டை மின்சக்தியின் உதவியால் பிரிப்பதற்கு 'எலக்ட்ராலிஸிஸ்' என்று

இந்தக் குழந்தைகளின் பின்னால் உள்ள இலச்சினையைப் பார்த்தாலே அது குழந்தை எழுத்தாளர் சங்கத்து இலச்சினை என்பது புரியவில்லையா? அதனுடைய 24வது ஆண்டு விழாவில்தான் பாவேந்தர் பாரதிதாசனின் 'வெண்ணிலாவே' என்ற பாடலுக்கு இந்தக் குழந்தைகள் இப்படி அழகாக அபிநயம் பிடிக்கின்றனர். குழந்தைகள் லதா, கௌரி, சாந்தி, மைதிலி.



பெயர். இதே மாதிரி இரு பங்கு ஜல வாயுவையும் ஒரு பங்கு பிராணவாயுவையும் ஒரு ஜாடிக்குள் கலந்து அதில் மின்சக்தியைப் பாய்ச்சும்போது ஒரு வெடி ஏற்படும். வாயுக்கள் மறைந்து அங்கு சில துளிகள் தண்ணீர் உண்டாகி இருக்கும்.

எளிய மாலுகியூல்களில் *(Simple Molecules)* இரண்டு அணுக் கருக்கள் தான் அடங்கியிருக்கும். மற்ற மாலுகியூல்களில்—புரோமைன், பாலிமர் ஆகியவற்றின் மாலிக்யூல்களில் ஆயிரக் கணக்கான அணுக் கருக்கள் அடங்கியிருக்கும். இம்மாதிரியான மாலுகியூல்களில் அணுக்கள் ஒன்றோடொன்று ஒரு குறிப்பிட்ட முறையில் இணைந்திருக்கும்.

ஓர் அணுவின் ஆதாரத்துக்கு நியூகிளியஸ் *(Nucleus)* என்று பெயர். இந்த நியூகிளியஸ் நேர் மின் சக்தியையும் மாறுபட்ட பல்வேறு எலெக்ட்ரான்களையும் கொண்டது. இதன் தூகள்கள் எதிர் மின்சக்தியை வெளிப்படுத்தி நியூகிளியஸைச் சுற்றி வரும் குணமுடையவை. அணுக்கள் ஒன்று சேர்ந்து மாலுகியூலாகும்போது எலெக்ட்ரான்களைத் தங்களுக்குள் மாற்றிக் கொள்ளவோ பங்கு போட்டுக் கொள்ளவோ செய்கின்றன.

உலோகங்களுக்கு ஒன்று அல்லது பல எலெக்ட்ரான்கள் உண்டு. இவை கலபமாக அழிந்து நேர் மின்சக்தி கொண்ட அணுக்களாக மாறும். இதற்கு ஐயான் *(Ion)* என்று பெயர். உலோகமல்லாத சில பொருள்கள் வெகு வேகமாக எலெக்ட்ரான்களைக் கிரகித்துக் கொண்டு எதிர் மின்சக்திகளை வெளிப்படுத்தும் ஐயான்களாக மாறுகின்றன. உதாரணமாக, உலோகமான சோடியம் அணுவையும் உலோகமல்லாத குளோரின் அணுவையும் ஒன்று சேர்த்தோமானால் சோடியம் ஓர் எலெக்ட்ரானை இழக்கிறது. இதைக் குளோரின் அணு ஏற்றுக் கொள்கிறது. அப்போது உண்டாகும் கலவைக்கு ஐயானிக் காம்பவுண்டு *(Ionic Compound)* என்று பெயர். இந்த ஐயானிக் கலவையான சோடியம் குளோரைடில் ஐயான்கள் அதன் எதிர் மின் சக்தியால் ஒன்று சேர்க்கப் பட்டிருக்கின்றன.

வேறு சில பொருட்கள் இப்படித் தங்கள் எலெக்ட்ரான்களை முழுதுமாக இழப்பதில்லை. அதற்கு மாறாக மற்ற அணுக்களுடன் பங்கு போட்டுக்கொள்கின்றன. உதாரணமாக கார்பன் அணுவானது தனது நான்கு எலெக்ட்ரான்களை மட்டுமே பங்கு போடக் கொடுக்கிறது. இரு பிராண வாயு அணுக்களுடன் நான்கு கரி (கார்பன்) அணுக்கள் கலப்பதினால் கார்பன் டையாக்ஸைடு என்ற மாலுகியூல் உருவாகிறது. இதில் அணுக்கள் ஒருங்கிணைந்துள்ளன. எப்படி? ஐயானின் கலவையில் உள்ளதைப் போல எதிர் மின் சக்திகளின் ஈர்ப்பினால் அல்ல. பங்கு கொண்ட எலெக்ட்ரான்கள் ஒரு பொதுவான பாதையில் எல்லா அணுக்களையும் சூழ்ந்து செயல்படுவதால் அக்கலவை ஏற்படுகிறது. இம்மாதிரி காம்பவுண்டுகளுக்கு காவாலண்ட் *(Cavalent)* என்று பெயர்.

ஓர் அணுவின் ஒருங்கிணைந்த சக்திக்கு அதன் வாலன்ஸி *(Valency)* என்று பெயர். ஓர் அணு தன்னுடைய ஒரே ஒரு எலெக்ட்ரானை அதிகரித்துக்கொள்ளவோ இழக்கவோ அல்லது கூறு போடவோ செய்யுமானால் அதற்கு மானோவாலண்ட் அணு *(Monovalent Atom)* என்று பெயர். எந்த ஓர் அணு தன்னுடைய இரண்டு எலெக்ட்ரான்களை (பிராண வாயுவைப்போல) அதிகரித்துக் கொள்ளவோ இழக்கவோ அல்லது கூறுபோடவோ செய்யுமானால் அதற்கு டைவாலண்ட் *(Divalent)* அணு என்று பெயர். இப்படியே டிரிவாலண்ட் (மூன்று) டெட்ரா வாலண்ட் (நான்கு) என்று போய்க் கொண்டே இருக்கும்.

தண்ணீரில் ஒரு டைவாலண்ட் பிராணவாயு அணு தன்னுடைய இரு எலெக்ட்ரான்களை இரு மானோவாலண்ட் ஜலவாயு அணுக்களுடன் பங்கிட்டுக் கொள்கிறது.

அமோனியாவில் மூன்று ஜலவாயு அணுக்கள் ஒவ்வொன்றும் தன்னுடைய ஒவ்வொரு எலெக்ட்ரானை டிரிவாலண்ட் நைட்ரஜனுடன் (உப்பு வாயு) பங்கிட்டுக் கொள்கிறது.

கார்பன் டையாக்ஸைடில் கார்பன் தன்னுடைய நான்கு எலெக்ட்ரான்களை இரு டைவாலண்ட் ஜலவாயு அணுக்களுடன் பங்கிட்டுக் கொள்கிறது.

கால்ஸியம் கார்பனேட்டில் கார்பன் (கரி) தன்னுடைய நான்கு எலெக்ட்ரான்களை மூன்று ஜலவாயுக்களிடையே பங்கிடுகிறது. இரு ஜலவாயு அணுக்கள் இரு கால்ஸியம் அணுக்களிடமிருந்து ஒவ்வொரு எலெக்ட்ரான்களையும் எடுத்துக்கொள்கிறது.

சில அணுக்கள் வெவ்வேறு மாலுகியூல்களில் வெவ்வேறு வாலன்ஸிகளை உடையதாக இருக்கும்.

ஸல்ஃபர் டையாக்ஸைடில் டெட்ரா வாலண்ட் (நாலு) கந்தகம் இரண்டு டிவாலண்ட் பிராணவாயு அணுவுடன் கலக்கிறது. ஸல்ஃபர் டிரையாக்ஸைடில் ஹக்ஸா (ஆறு) வாலண்ட் கந்தகம் மூன்று டிவாலண்ட் பிராணவாயு அணுவுடன் கலக்கிறது.

மந்திரக் கம்பளம் 8

வாண்டுமாமா

குந்தளவல்லிக்கு வியப்பான வியப்பு. விசித்திரபுரி இளவரசன் கீர்த்தி வர்மனைப் பார்த்ததில்லையே தவிர அவனைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருந்தாள். பெண்களைக் கண்டாலே ஒதுங்கிப் போகும் சுபாவம் கொண்டவனென்று எத்தனையோ பேர் என்னென்னவெல்லாமோ சொல்லி யிருந்தார்கள். அதி புத்திசாலியான இளவரசன் தன்னிடம் நட்புக்கொள்ள யார் வந்தாலும் அவர்களுடையபுத்திசாலித்தனத்துக்குச் சோதனை வைத்து அவர்களைத் தலை குனியச் செய்வான் என்று கூறியிருந்தார்கள். பகவத்கீதையில் தொண்ணூற்றி எட்டாவது சுலோகத்துக்கு என்ன பொருள்? 'கலிங்க நாட்டை இருநூறு ஆண்டுகளுக்கு முன் ஆட்சி செய்தவர் யார்? நீ இதைப் படித்திருக்கிறாயா?... அதைப் பற்றித் தெரியுமா?' என்று இப்படி யெல்லாம் வினாக்களை எழுப்பி அவர்களைத் திக்குமுக்காடச் செய்து அவமானப்படுத்தி அனுப்புவான் என்று கேள்விப்பட்டிருந்தவளுக்கு இளவரசனின் செயல்கள் வியப்பளித்தன. அதே சமயம் இளவரசனைப் பற்றி அவள் உள்ளத்தில் உருவாகி இருந்த மதிப்பு மளமளவென்று உயர்ந்து கொண்டே போயிற்று.

குந்தளவல்லி கீர்த்தியின் விருப்பப்படி அற்புதமாக நடனமாடினாள். தான் ஆடுவதில், அபிநயம் பிடிப்பதில் ஏதாவது குறை கண்டுபிடித்துக் குத்தலாகக் கூறுவானோ என்று சற்றுப் பயத்துடனேயே நடனமாடினாள். ஆனால் தன் நாட்டியத்தை இத்தனை ஆர்வத்துடனும் ஆசையோடும் இதுவரை யாருமே ரசித்து மகிழ்ந்ததில்லை என்ற பூரிப்பு ஏற்பட்டது குந்தளவல்லிக்கு. அத்தனை ரசிகத் தன்மையோடு அவள் நடனத்தை ரசித்துக் கைதட்டிப் பாராட்டினான் கீர்த்தி. வீணை மீட்டியபடி அவள் பாடியபோதும் இதே மாதிரி தான் கீர்த்தி யிடமிருந்து பாராட்டுக்கள் கிடைத்தன. விருந்தின்போதும் இளவரசன் அவள் அருகில் அமர்ந்து தான் உணவருந்தினான். அவளோடு பேசும்போதும் கீர்த்தி தன் அறிவாற்றலைக் காட்ட அனாவசியமான விஷயங்களைப் பேசி அவளுக்குச் சங்கடத்தை உண்டாக்கவில்லை. அவன் பேச்சு முழுதும் அவளைப் பற்றியதாகவே இருந்தது. அவள் எப்படி அற்புதமாகப் பாடினாள், ஆடினாள், என்பதைப் பற்றியும் அவள் அழகைப் பற்றியுமே கீர்த்தி புகழ்ந்து பேசியதானது அவளுக்கு ரொம்ப வெட்கமாகவும் பூரிப்பாகவும் இருந்தது. 'இத்தனை நல்லவரான, பெண்களுடன் இங்கிதம் தெரிந்து பழகக் கூடியவரான, ரசிகரான, அழகரான, அறிவாளியான இவரைப் பற்றியா ஏதேதோ வதந்திகள் பரவி யிருக்கின்றன!' என்பதை எண்ணி வருந்தினாள் குந்தளவல்லி.

விருந்து முடிந்து அப்படியப்படியே ஆங்காங்கே எல்லோரும் நிலா முற்றத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். எல்லோருடைய வயிறும் மனமும் நிறைந்திருந்தன. அதே மாதிரி

வாடா மலர்

மது அருந்துவது, கெட்டவரோடு பழகுவது, ஊர் சுற்றுவது, அகாலத்தில் துயில் கொள்வது, கணவனைப் பிரிந்திருப்பது, பிறர் வீட்டில் வசிப்பது—இவ்வாறும் பெண்களைக் கெடுப்பவை. —மனு

நூறு பேர்கள் சேர்ந்து ஒரு முகாம் அமைக்கலாம். ஆனால் ஓர் இல்லத்தை இல்லமாக்க ஒரு பெண் வேண்டும்.

—சீனப் பழமொழி



வாய் நிறையவும் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். பேச்செல்லாம் இளவரசன கீர்த்தியைப் பற்றித்தான் என்பதைச் சொல்லவா வேண்டும்?

இரவு பூத்து மணம் பரப்பும் ஓர் அற்புத மலர்க் கொடி வீட்டின் நடுவே கீர்த்தியும் குந்தளவல்லியும் தனிமையாக அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். இளவரசனோடு பேசுவதற்குப் பாவம் அவளுக்கு எந்த விஷயமும் கிடைக்கவில்லை. அறிவாளியான அவனிடம் எதையாவது பேசித் தனது பலவீனத்தை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. ஆகவே, விசித்திர புரியைப் பல விதங்களில் விசாரத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கும் அக்கினி அரக்கனை அந்தக் கொடிய மிருகத்தைப் பற்றிப் பேசலானாள்.

''அதென்ன அத்தனை பயங்கரமான மிருகமா! அதன் அருகிலே யாராலும் போக முடியாதாமே?'' என்று கேட்டாள் குந்தளா.


இதையே நேற்றுக் கேட்டிருந்தால் கீர்த்தி 'அக்கினி அரக்கனாவது மண்ணாவது' என்று கூறியிருப்பான். ஆனால் இப்போது மந்திரம் மாயம் இவைகளில் நம்பிக்கை ஏற்பட்டுவிட்ட கீர்த்தியல்லவா? அதுவுமல்லாமல் குந்தளவல்லி அந்தக் கொடிய மிருகத்தைப் பற்றிக் குறிப்பாகக் கேட்டது அவனுக்கு அதைப் பற்றிக் குறைவாகக் கூற முடியாதபடி செய்து விட்டது.

''வீரமில்லாதவர்களுக்கு எதைக் கண்டாலும் பயங்கரமாகத்தான் தோன்றும். அக்கினி அரக்கன் என்ற அந்த மிருகம் கொடியதுதான். ஆனால் அதை அழிப்பதற்குத் தந்திரமும் திறமையும் வேண்டும்'' என்றான் கீர்த்தி.

''திறமைசாலியும், வீர தீரமுமிக்க நீங்கள் அதை அழிக்கப் போகாமல் உங்கள் தம்பிகளை ஏன் அனுப்பினீர்கள்? அதனால் உங்களுக்கு நாட்டில் எத்தனை அவப் பெயர் ஏற்பட்டிருக்கிறது தெரியுமா?''

''தெரியும். நான் என் தம்பிகளின் வீரம் வெளிப்பட வேண்டும் என்று எண்ணியே அப்படிச் செய்தேன். ஆனால் அது வேறு விதமான விளைவுகளை உண்டாக்கி விட்டது. அதுசரி, அக்கினி அரக்கனைப் பற்றி இத்தனை அக்கறையாகக் கேட்கிறாயே ஏன்?''

''வேறொன்றுமில்லை. நம் நாட்டுக்கு நம்மாலான நன்மை ஏதாவது செய்யலாமே என்றுதான். உங்களிடமிருந்து அதைக் கொல்வதற்கான சூட்சுமத்தை அறிந்து கொண்டு போய் நானே அதை



மாய்த்து நாட்டுக்கு சுபிட்சத்தை உண்டாக்கலாமே என்று நினைக்கிறேன்.''

குந்தளவல்லியின் பேச்சு உறங்கிக் கிடந்த கீர்த்தியின் வீரத்தை உசுப்பி விட்டது. 'ஒரு பெண் அதுவும் இவ்வளவு அழகும் நளினமும் உடையவள் நெருப்பு மிருகத்தை எதிர்த்துப் போராடப் போவதா?' அவனுடைய தன்மானம் தலைநிமிர்ந்து பார்த்தது.

''அந்த மிருகத்தை அழிக்க நீ போக வேண்டுமா என்ன? உனக்கு அதனுடைய கொம்பும் வாலும் வேண்டுமா சொல்லு. நாளைக்கே அதைக் கொன்று அவைகளை உன் விளையாட்டுப் பொருளாகக் கொண்டு வந்து தருகிறேன்'' என்றான் கீர்த்தி.

''இதை நீங்கள் சொல்லும்போதே என் உடல் சிலிர்க்கிறது. ஆனால் அதனால் உங்கள் உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்படுமானால் அதை என்னால் தாங்கவே முடியாதே'' என்றபோது குந்தளவல்லியின் சுந்தர முகம் வாடியது. கருவண்டுக் கண்கள் கலங்கின. தன்னிடம் இத்தனை அன்பும் அபிமானமும் கொண்டுவிட்ட இந்த அழகிக்காக எதையும் செய்யலாம் என்ற உறுதி பிறந்தது கீர்த்தியின் உள்ளத்திலே. ''கவலைப்படாதே, குந்தளா! இந்த மாதிரியான கொடிய மிருகங்களை எல்லாம் கொல்வதற்கு வீரம் மட்டும் இருந்தால் போதாது. விவேகமும், தந்திரமும், சாதுரியமும் வேண்டும். நான் என் அப்பாவிடம் அந்த மிருகத்தைப் பற்றி ஏதோ கூறினாலும் அதை அழிப்பது எப்படி என ஆராய்ச்சி செய்து கொண்டுதான் இருக்கிறேன். இப்போது நீயும் இது விஷயமாகப் பேசினாயல்லவா? இனி தீவிரமாகவே இதில் செயல்படுவேன், கவலைப்படாதே'' என்றான். குந்தளவல்லிக்குத் தான் ஆகாயத்தில் பறப்பது போலிருந்தது. மன்னர் மந்தஹாச மகாராஜாவினால் கூட முடியாததைத் தான் சாதித்து விட்டோம் என்ற பூரிப்பில் அவள் முகம் பிரகாசித்தது.

மங்களபுரியில் ஒரு பழக்கம். ஏதாவது முக்கிய விருந்து, கேளிக்கை, களியாட்டம் என்றால் அதில் பிரதானமானவர்கள் விடை கொடுக்கும் வரை வெளியேறக் கூடாது. இப்போது இந்த விருந்தில் பிரதானமானவராகக் கீர்த்திதான் இருந்தான். ஆனால் அவனோ குந்தளாவுடன் கொடி வீட்டில் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்தான். விருந்தாளிகள் விடைபெற முடியாமல் பேசிப் பேசி அப்படியப்படியே நிலா முற்றத்தில் பலவித கோலங்களில் சாய்ந்தும் சரிந்தும் படுத்தும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். இளவரசன் விடை பெற்றுப் போன பிறகல்லவா அவர்கள் விடைபெற வேண்டும்? நள்ளிரவுக்கும் மேலாகி விட்டது. இன்னும் அவ்விருவரும் பேச்சை முடித்துக் கொண்டு வரவில்லை. விடிவெள்ளி கூட முளைத்து விட்டது. பறவைகள் தங்கள் கூடுகளிலிருந்து சோம்பல் முறித்தபடி எழுந்து படபடவென்று பறந்து செல்லலாயின. அப்பாடா! ஒரு வழியாகக் கீர்த்திக்கும் அப்போதுதான் வெகு நேரமாகி விட்ட நினைவு வந்து மாணிக்க வர்மரிடமும் குந்தளவல்லியிடமும் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினான்.

''குந்தளா! விரைவிலேயே அக்கினி அரக்கனாகிய அந்தக் கொடிய மிருகத்தின் கொம்புகளையும் வாலையும் உனக்குப் பரிசாக அனுப்பி வைக்கிறேன்'' என்று விடைபெற்றான். அவன் சென்றதும் அரைத் தூக்கம், முக்கால் தூக்கம் முழுத் தூக்கத்திலிருந்த விருந்தாளிகளும் ஒவ்வொருவராகத் தள்ளாடியபடி தங்கள் வீடு நோக்கிப் போனார்கள்.

கீர்த்தி குண்டுமல்லிகைப் புதருக்கு அருகே வந்தான். உருவை மறைக்கும் குல்லாயை எடுத்து அணிந்து கொண்டான். பறக்கும் கம்பளத்தை எடுத்து விரித்து அதில் அமர்ந்து கொண்டான். விசித்திரபுரி அரண்மனைக்குப் போகுமாறு கட்டளையிட்டான். கம்பளம் ஜிவ்வென்று மேலே எழும்பி ஆகாயத்திலே மிதந்து சென்றது.

நிர்மானுஷ்யமான விசித்திரபுரி அரண்மனையின் தர்பார் மண்டபத்தில் வந்து கம்பளம் இறங்கியபோது கீழ்வானத்திலே சூரியன் தகதகவென்று கிளம்பிக் கொண்டிருந்தான். ஆள் நடமாட்டம் இல்லாத அரண்மனையானாலும் அந்த அதிகாலை வேளை அழகாகவே இருந்தது. புது மலர்களின் கம்மென்ற மணமும் புள்ளினங்களின் ஒலியும் குளிர்ந்த மெல்லிய இதமான காற்றும் இரவு முழுவதும்





விழித்திருந்தும் கீர்த்திக்குத் தூக்கம் வரவில்லை. எப்படித் தூக்கம் வரும்? ஓர் அழகிக்கு அக்கினி அரக்கனின் கொம்பு களையும் வாலையும் பரிசாகத் தருவதாக வாக்களித்து விட்டானே! 'அது ஒன்றும் பெரிய விஷயமல்ல' என்று வேறல்லவா கூறியிருந்தான். ஆனால் மந்திரக் கம்ப ளத்தில் பறந்து வரும்போது சிந்தித் தவனுக்கு அது எத்தனை சிக்கல் நிறைந்த விஷயம் என்பது புலனாயிற்று.

'முதலில் அந்த அக்கினி அரக்கன் எங்கே இருக்கிறது, அது எப்படி இருக் கும் என்பதை அறிந்தாக வேண்டும்' என்று தனக்குத் தானே கூறிக்கொண் டான். உத்தியான வனத்தின் ஓரமாக நடந்து கொண்டே வெகு தூரம் உலா வியவனுக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. 'மந்திரப் பொருள்கள் குவிந்து கிடக்கும் வடக்குக் கோட்டை வாசல் உப்பரிகை மேலுள்ள அறைக் குப் போனால் ஏதாவது வழி பிறக்கலாம்' என்ற முடிவுடன் வேகமாக நடந்தான். அவன் முடிவு அவனை ஏமாற்றவில்லை. அங்கு குவிந்து கிடந்த பொருள்களில் ஓர் அதிசயப் பொருள் இருந்தது. அது ஒரு பளபளக்கும் பளிங்குக் கல் உருண்டை.... ரசகுண்டு!

இந்த உலகத்தில் எந்தக் கோடியில் யார், எது இருந்தாலும் அது அந்தப் பளபளக்கும் கோளத்தில் அப்படியே தெரியும். அதன் முன்னால் நின்றபடி காணவேண்டியதை நினைத்துக்கொண்டு அதன் மீதாக வலது கையினால் மூன்று தடவை வட்டமாகச் சுற்றிச் சட்டென்று விரல்களால் சொடுக்கினால் போதும். காணவேண்டிய பொருள், நபர் காட்சி களாகப் பட்டென்று அதில் தெரியும். இப்படியொரு மந்திர சாதனம் உண் டென்று அரபு நாட்டு மந்திரக் கதை களில் படித்திருந்தான் கீர்த்தி. அது நினைவுக்கு வரவே அந்த ரசகுண்டை மேஜை நடுவில் வைத்து அதன் மீது படிந்திருந்த புழுதிகளைத் துடைத் தான். 'இப்போது குந்தளவல்லி என்ன செய்து கொண்டிருப்பாள் என் பதை இதன் மூலம் பார்க்கலாமா' என்ற ஆவல் எழுந்தது. முதலில். உடனே பண்புடையவனான அவன் உள்ளம் 'அவள் அறியாமல் அவளைப் பார்ப்பது நாகரிகமாகாது, அது கூடாது' என்று கூறவே அந்த எண்ணத்தைக் கைவிட்டவன், 'அக்கினி அரக்கனையும் அது இருக்குமிடத்தையும் எனக்குக் காட்டுவாயாக' என்று எண்ணியபடியே அதன் மீது மூன்று முறை வலக்கை யால் சுற்றிச் சொடுக்கினான்.


அடுத்த விநாடி.... ஆ... ஆ...! அது என்ன? அந்த ரசகுண்டிலே விதம்



விதமான வண்ணக்கலவைகள் வெகு வேகமாகச் சுழன்றன. ஏதோ ஒரு யந்திரத்தைப் போல அதனுள் காடு, மரம், மலை, ஆறு எல்லாம் வேகமாகத் தோன்றுவதும் மறைவதுமாக இருந்தது. கடைசியாகத் தளதளவென்று கொதிக்கும் எரிமலைக் குழம்பு... க்ளப், ப்ளப், க்ளுப்' என்று குமிழிகள் தோன்றி உடைந்தன. தளதளவென்று குழம்பு கொதிப்பது போல் அக்கினிக் குழம்பு கொதித்தது. திகுதிகு என்று தீ ஜ்வாலை விட்டு எரிந்தது. கொதித்துக் குமுறும் எரிமலைக் குழம்பிலே அநாயாசமாக மூழ்கி மூழ்கி நீந்திக் கொண்டிருந்தது ஒரு பயங்கரமான ஜந்து. அதன் மூக்குத் துவாரங்களிலிருந்து நெருப்பு ஜ்வாலை நீர் ஊற்றைப் போல் பீச்சியடித்துக் கொண்டிருந்தது, கடலில் திமிங்கிலத்தின் மூக்குத் துவாரத்திலிருந்து கடல் நீர் பீச்சியடிக்குமே அது போல்.

'இதுதான் அக்கினி அரக்கனா? காணச் சகிக்கவில்லையே. என்ன கோரம், என்ன பயங்கரம்! மந்திரக் கண்ணாடிக் குண்டில் காணும்போதே அந்த நெருப்பின் தகிப்பைத் தாங்க முடியவில்லையே, இதன் அருகில் எப்படிப் போவது? உருவை மறைக்கும் மாயக் குல்லாய், ஒரு தப்படிக்கு ஒன்பது மைல்கள் பாயும் மாயக் காலணி, எதையும் ஒரே வீச்சில் துண்டாக்கும் மந்திரக் கத்தியும் இருக்கும்போதுகூட அதன் அருகே போக முடியாது போலிருக்கிறதே. பாவம், என் தம்பிகள் இன்ப வண்ணனும், மோகனரங்கனும் எவ்வித சாதனமுமின்றி இதைச் சந்திக்கக் கிளம்பிப் போனார்களே!

'அன்றைய மனநிலையில் அப்படி ஒரு ராட்சஸ மிருகம் இருக்க முடியாது என்று அசட்டுத்தனமாக வாதாடினேனே? கற்பனையும் கட்டுக் கதையுமான ஒரு மிருகத்தைத் தேடிப் போகிறவர்கள் விரைவிலேயே திரும்பி வருவார்கள் என்று நினைத்தது எத்தனை தவறு? இதோ எதையும் சாம்பலாக்கும் வல்லமை கொண்ட மிருகம் இருக்கிறதே. பாவம் என் தம்பிகள். அது சரி...இந்தக் கொடிய மிருகத்தை வெற்றி கொள்வது எப்படி... இனி அடுத்து நான் செய்ய வேண்டியது என்ன?' இப்படிப்பட்ட சிந்தனையில் மூழ்கியவனாகக் கீர்த்தி மந்திரக் கண்ணாடிக் குண்டின் முன் சிலையாக அமர்ந்திருந்தான். அக்கினி அரக்கனாகிய கோர மிருகம் குமுறும் எரிமலைக் குழம்பிலே கும்மாளமிட்டு வாலைச் சுழற்றியடித்தபடி நீந்திக் களிப்பது ரசகுண்டிலே தெரிந்து கொண்டிருந்தது. (தொடரும்)





பட்டு: யானையாரே, இதென்ன அசட்டுக் காரியம்? சேற்றை வாரிவாரி ஏன் இப்படி அப்பிக் கொள்ளுகிறீர்கள்?

யானை: விளையாடும் போது கீழே விழுந்து சிராய்ப்பு ஏற்பட்டால் நீ என்ன செய்கிறாய்?

பட்டு: காயம் பட்டால் நான் அம்மாவிடம் ஓடுவேன். அம்மா காயத்துக்கு 'டிங்க்சரோ, ஆயின்ட்மெண்டோ' ஏதோ ஒரு மருந்து வைத்துக் கட்டுவாள்.


யானை: உனக்கு எத்தனை வயசானாலும் உன்னைக் கவனிக்க உன் அம்மா இருக்கிறாள். ஆனால் எங்களுக்கு இயற்கைதான் அம்மா. இப்போது நான் சேற்றைப் பூசிக் கொண்டது நீ உன் காயத்துக்கு மருந்து போட்டுக் கொள்வாயே அதே மாதிரிதான்.

பட்டு: அப்படியானால் உன் உடம்பில் காயமா? எப்படி, எப்போது ஏற்பட்டது காயம் உனக்கு?

யானை: உணவு தேடி அலையும்போது மரக் கிளைகள் குத்தியோ, எதிரியோடு போராடும் போது அவனது பல், நகம் இவைகளினாலோ எங்களுக்குக் காயம் ஏற்பட்டால் அதைக் குணப்படுத்த இயற்கை எங்களுக்குக் கற்றுக்கொடுத்திருக்கும் வைத்தியம் காயத்தின் மீது சேற்றை அப்பிக் கொள்ளுவதுதான். அதுமட்டுமல்ல. எங்கள் உடலுக்குஉப்பு தேவைஎன்றால் நாங்கள் கடையில் போய் உப்பு வாங்கிச் சாப்பிட முடியுமா? ஆகவே எங்கள் உடலுக்கு உப்புச் சேர வேண்டும் என்பதை இயற்கை உணர்த்தும் போது நாங்கள் அதைத் தேடிப் போவோம். பூமியில் உப்புள்ள இடம் எங்களுக்குத் தெரியும். தந்தத்தாலும், துதிக்கையினாலும் பூமியைத் தோண்டி உப்பை எடுத்துச் சாப்பிடுவோம். இயற்கைதான் எங்களுக்கு டாக்டர், அம்மா எல்லாம்.

பட்டு: ஓ! அப்படியா? சேற்றுக் குளியலும் உப்பு விருந்தும் எதற்கென்று இப்போது புரிந்தது யானையாரே!

தெரியுமா ?



1267. இடி மின்னல்களால் விபத்து நேராதிருக்க ஒரு சூட்சுமத்தைக் கண்டறிந்தவர் யார் ?

1268. எரிமலைப் பிரதேசங்களில் காணப்படும் வெந்நீர் ஊற்றுக்களுக்கு என்ன பெயர் தெரியுமா ?

1269. லண்டனில் 1656ம் ஆண்டு ஒரு பிரபல வானியல் அறிஞர் அவதரித்தார். ஒரு பிரபல 'காமெட்' (வால் நட்சத்திரம்) டுக்கு அவர் பெயரைச் சூட்டியுள்ளார்கள். அது யார் தெரியுமா ?

1270. விவிலிய (பைபிள்) வேதம் தெரியுமா உங்களுக்கு? அதில் நோவாவின் குமாரர்கள் மூவரின் பெயர் வருகிறது. ஷெம், ஜாபெத் என்பது இருவரின் பெயர். மூன்றுவது பிள்ளையின் பெயர் என்ன?

1271. மொகலாயப் பேரரசர் — ஷாஜஹானுக்கு நான்கு குமாரர்கள் என்று தெரியுமா உங்களுக்கு? மூரத், அவுரங்கசீப் என்பது இருவரின் பெயர். மற்ற இருவரின் பெயர் என்ன? மூத்தவனும் கடைசி மைந்தனும் யார் ?

1272. பிரபல ஆங்கில நாடகாசிரியர் வில்லியம் ஷேக்ஸ்பியருடைய மனைவியின் பெயர் என்ன?

1273. ஒரு நாட்டின் தலைநகர் உலகப் புகழ்பெற்ற சுருட்டுக்களுக்குப் பெயர் போனது. (திருச்சி மாவட்டத்தில் உள்ள உறையூரல்ல!) அது எது?

1274. உலகப் புகழ்பெற்ற தாஜ் மகாலைக் கட்டியது ஷாஜஹான் என்று உங்களுக்குத் தெரியும். அது அவர் சிங்காதனம் ஏறியபோது சூட்டப்பட்ட பெயர். அவருடைய முதல் (இளமைப் பெயர்) பெயர் என்ன தெரியுமா ?

1275. ஸ்விட்ஸர்லாந்துக்கு வேறு ஒரு பெயர் உண்டு. அது தெரியுமா ?

1276. மைக்ரோஃபோனைக் கண்டு பிடித்த விஞ்ஞானியின் பெயர் என்ன?

1277. புகழ்பெற்ற பாபருடைய தாத்தா யார் தெரியுமா? தகப்பனரின் பெயர் தெரிந்திருந்தாலும் சொல்லுங்களேன்.

1278. (a) ஊதாண்ட், (b) பால்ராப்ஸன், (c) ஆல்ஃபிரட் ஷ்வைட்ஸர் (d), ஜூலியஸ் நைரேரி — இவர்கள் எதனுல் புகழ் பெற்றவர்கள் ?

1279. ஓயாஸிஸ் என்பது — ஒரு வகைப் பழம், கதகதப்பான காற்று, அராபியக் குதிரை வீரன், பாலைவனத்தில் உள்ள நீர் நிலை — இவைகளில் எது?

1280. கான்ஸ்டாண்டி நோபிள் என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்ட நகரத்தின் இன்றையப் பெயர் என்ன?


1281. மெட்டராலஜிஸ்ட் (Meteorologist) என்பவர் — கிரகங்களை, நோய்களை, கால நிலையை, தாவரங்களை — ஆராய்பவர் — இதில் எது சரி ?

1282. ஆடுகளின் கூட்டத்துக்கு மந்தை என்கிறோமில்லையா? அதே போல் உன் அப்பா ஆடும் சீட்டுக்களுக்கும் திராட்சைப் பழக் கொத்துக்கும், கப்பல்களுக்கும், வேட்டை நாய்க் கூட்டத்துக்கும் ஆங்கிலத்தில் ஒவ்வொரு பெயர் உண்டு. அது தெரியுமா?

1283. 'வந்தேன், பார்த்தேன், வெற்றி கொண்டேன்!' என்று கூறியவர் மாவீரர்களில் யார் சொன்ணர்கள் தெரியுமா ? மகா அலெக்ஸாண்டர் — நெப்போலியன், ஜூலியஸ் ஸீஸர், செங்கிஸ்கான், அக்பர்.

1284. கீழ்க்கண்ட நகரங்களில் எது மிகவும் வடகோடியில் உள்ளது ? ஆஸ்திரேலியா, ஸ்டாக் ஹோம், ஹெல்சிங்கி, ஐஸ்லாந்து.


தெரியுமே !



விடைகள் : 1267. பெஞ்சமின் பிராங்க்ளின். 1268. கெய்ஸர் (Geysers). 1269. எட்மண்டு ஹாலி. ஹாலிவால் நட்சத்திரம். 1270. ஹாம். 1271. தாராஷிகோ, ஷுஜா மற்ற இருவர். மூத்தவன் தாரா, கடைசி மைந்தன் ஔரங்கசீப். 1272. அன்னி ஹாத்தாவே. 1273. க்யூபா நாட்டின் தலைநகரான ஹவானா. 1274. குர்ரம். 1275. ஹெல்விஷியா (Helvisia). 1276. டேவிட் எட்வர்டு ஹக்ஸ். 1277. தாத்தா — தைமூர்; அப்பா — உமர் ஷேக் மிர்ஸா. 1278. a. ஐ. நா. சபையின் காரியதரிசியாக. b. பிரபல பாடகராக, c. வைத்திய உதவித் தொண்டராக; d. தங்கநிகாவின் முதல் பிரதமராக. 1279. பாலைவனத்திடையே காணப்படும் சோலை. 1280. இஸ்தான்புல். 1281. கால நிலையை ஆராய்பவர். 1282. சீட்டுக்களுக்கு Pack, திராட்சைக் குலைக்கு Bunch, கப்பல்களுக்கு Fleet, வேட்டை நாய்க் கூட்டத்துக்கு Pack. 1283. ஜூலியஸ் சீஸர். 1284. ஐஸ்லாந்து.

'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்

இப்பொழுது! யுகோபாங்க் உங்கள் டிபாஸிட்டுகளை கிட்டத்தட்ட **மும்மடங்கு** ஆக்குகின்றது



நீங்கள் யுகோபாங்க் டிபாஸிட் ஸர்டிபிகேட் திட்டத்தில் பணம் போட்டு வைத்தால்!

இத்திட்டப்படி ரூ. 5000 டிபாஸிட் செய்கிறீர்கள் என்றால், அத்தொகை சரியாக 15 ஆண்டுகளில் கிட்டத்தட்ட மூன்று மடங்கான ரூ. 15,000 ஆகப் பெருகிவிடுகிறது நீங்கள் முதலில் போட்ட பணத்திற்கு இது எவ்வளவு கணிசமான தொகை! இத்திட்டம், குறைந்த தொகை ரூ 100 லிருந்து தொடங்கி அதற்கு மேல் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் போகலாம்.

தாங்களே தங்களுக்கு உதவ
மக்களுக்கு லாபகரமாக உதவுகிறது

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

UCOC-20 TAM




அண்ட வெளி
அசுர எலியார்